# உதயன்

சுடர் : 36 | செவ்வாய்க்கிழமை | ஆனி 15 ஆம் நாள் 29 ஜூன் 2021 | வள்ளுவர் ஆண்டு 2052 | பக்கங்கள்: 20 விலை: 30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111
கதிர் : 215


## அஸ்ராஜெனகா பெற்றவர்களுக்கு மொடர்னா, பைசர் தடுப்பூசிகள்

கொழும்பு, ஜூன் 29
முதலாம் கட்ட கொரோனா தடுப்பூசியாக அஸ்ராஜெனகா செலுத்திக்கொண்டவர்களுக்கு, இரண்டாவது தடுப்பூசி 19 ➤

## சாவு 41

கொழும்பு, ஜூன் 29
நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி மேலும் 41 பேர் உயிரிழந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக் 19 ➤

## தொற்று 1,850

கொழும்பு, ஜூன் 29
நாட்டில் நேற்றும் ஆயிரத்து 850 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என அரச தகவல் திணைக்களம் நேற்றி 19 ➤

# என்னைக் கொல்லவந்த நபரிடமிருந்து கைதிகள் விடுதலையை ஆரம்பியுங்கள்

### இனியும் வைராக்கியத்துடன் வாழவேண்டியதில்லை
### பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா அதிரடி வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 29
இனியும் வைராக்கியத்துடன் வாழவேண்டியதில்லை. எனவே, பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட தமிழர்கள் விடுதலை செய்யப்படவேண்டும். அதற்கான நடவடிக்கையை, என்னைக் கொலை செய்வதற்காக தற்கொலை குண்டுதாரியை இராணுவ தலைமையகத்துக்கு அழைத்துவந்த மொரிஷ் என்பவரிலிருந்து ஆரம்பிக்கப் படவேண்டும். 19 ➤



## யாழ். முதல்வருக்கு எதிராக உறுப்பினர் முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஜூன் 29
யாழ்ப்பாண மாநகர முதல்வர் சட்டத்தரணி வி. மணிவண்ணன் யாழ். மாநகர சபை அமர்வில் எடுத்திருந்த முடிவுக்கு எதிராக வடக்கு மாகாண உள்ளூராட்சி 19 ➤

## ஒரே ஆயுதம் தடுப்பூசியே தயங்காது ஏற்றுங்கள்

### கொரோனாத் தடுப்புக்கான செயற்பாட்டு மையம் அறிவுறுத்து

கொழும்பு, ஜூன் 29
"பெருந்தொற்று நோயான கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த எம்மிடம் இருக்கும் ஒரேயோர் ஆயுதம் தடுப்பூசியே. எனவே, கொரோனாத் தடுப்பூசிகளைப் 19 ➤



## நெல்லியடி பொலிஸார் நால்வருக்கு தொற்று

யாழ்ப்பாணம், ஜூன் 29
நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் 34 அலுவலர்களிடம் நேற்று மேற் 19 ➤

### யாழில் நேற்று மாலைவரை
## 9,988 பேருக்கு 2ஆவது டோஸ்

யாழ்ப்பாணம், ஜூன் 29
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொவிட்-19 தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் வழங்கும் திட்டம் நேற்று ஆரம்பிக்கப்பட்டு, மாலைவரையான நேரப்பகுதியில் 9 ஆயிரத்து 988 பேர் தடுப்பூசியைப் பெற்றுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
கொவிட்-19 தடுப்பூசி வழங்கல் திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக 50 ஆயிரம் தடுப்பூசி மருந்துகள் யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு கடந்த மே மாத இறுதியில் 19 ➤



## அரசுக்கு எதிராக இரவிரவாக ஜே.வி.பி. தீப்பந்தப் போராட்டம்

அம்பாறை, ஜூன் 29
மக்கள் விடுதலை முன்னணியின் அம்பாறை மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் முக்கியஸ்தர்கள் அடங்கிய பிரமுகர்கள் அரசுக்கு எதிரான கோஷங்களுடன் கல்முனை நகரில் நேற்றிரவு கண்டன தீப்பந்த போராட்டத்தில் ஈடுபட்டனர்.
அம்பாறையின் பல்வேறு பிரதேசங்களைச் சேர்ந்த ஜே.வி.பி ஆதரவாளர்கள் பலரும் ஒன்றிணைந்து அரசைக் கண்டித்து கோஷங் 19 ➤

## தடுப்பூசி ஏற்றினால் அடுத்தமாதம் ஆரம்பிக்கலாம்

விரிவு பக்கம் 03

## விரைவில் உணவுக்கு தட்டுப்பாடு

விரிவு பக்கம் 10


செய்திகள் மற்றும் விளம்பரங்களை உதயனில் பிரசுரிக்க....
செய்தி 021 493 0000 / 077 1209994
விளம்பரம் 021 493 1111 / 071 6182182




Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



# சீனர்களின் கடலட்டைப் பண்ணையால் மீனவர்களின் வாழ்வாதாரம் சிதையும்!

*பிரதேச சபை உறுப்பினர் தெரிவிப்பு*

கிளிநொச்சி, ஜூன் 29

பூநகரி கௌதாரிமுனை கடற்பரப்பில் சீன நிறுவனத்தின் கடலட்டை பண்ணை செயற்படுத்தப்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது என பூநகரி பிரதேச சபையின் உறுப் பினர் சி.சிறிரஞ்சன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

கடந்த 2010ஆம் ஆண்டின் பின்னர் மீளக் குடியமர்ந் துள்ள கௌதாரிமுனை மக்களின் வாழ்வாதாரம் கட்டி எழுப்பப்பட வேண்டும். இன்றுகூட அம் மக்களுக்கு ஒழுங் கான போக்குவரத்து இல்லை. மூடப்பட்ட பாடசாலை திறக்கப்படவில்லை. மருத்துவ வசதிக்காக பதின்மூன்று கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள பூநகரி பிரதேச மருத்துவ மனைக்கே கௌதாரிமுனை மக்கள் வரவேண்டி உள் ளது. இம் மக்களின் வாழ்வாதாரமாக கடற்றொழில் காணப்படுகின்றது.

பூநகரி கடலில் பாரம்பரிய கடற்றொழிலைத் தவிர புதிய சட்டவிரோத தொழில் முறைகள் அனுமதிக்கப்படவில்லை. சட்டவிரோத தொழில்களுக்கு எதிராக பூநகரி கடற்றொழி லாளர்கள் தொடர்ச்சியாகவே குரல் எழுப்பி வருகின்றார் கள். இந்நிலையில் சீனர்கள் கௌதாரிமுனைக் கடற் பரப்பில் சட்டவிரோதமான முறையில் கடலட்டைப் பண் ணையை அமைத்து தொழில்செய்து வருகின்றார்கள். இதற்கான அனுமதியை யார் வழங்கினார்கள்?. பூநகரி பிரதேச செயலகமோ பூநகரி பிரதேச சபையோ அனுமதி வழங்காத நிலையில் சட்டவிரோதமான முறையில் கௌதாரிமுனையில் சீனர்களின் கடலட்டைப் பண்ணை செயற்பாடுகள் நடைபெறுகின்றன.

இச் செயற்பாடுகள் பூநகரி மக்களின் கடற்றொழில் வாழ் வாதாரத்தை சிதைத்து மக்களின் தொழில் முறைக ளையே அழித்துவிடும். இப் பண்ணை தொடர்பாக உய ரதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். பூநகரி கடற் பரப்பில் பாரம்பரியமான தொழில் முறைகளுக்கு அப் பால் பொருத்தமற்ற அனுமதியற்ற தொழில் முறைகள் தடுக்கப்பட வேண்டும் - என்றார். (ப-13)

# பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் பாதிப்பை சிங்களவரும் உணர்வர்

*சாள்ஸ் எம்.பி தெரிவிப்பு*



**மன்னார், ஜூன் 29**

**பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் பாதிப்புகளை இனிச் சிங்கள மக்களும் உணர்ந்துகொள் வார்கள் என்று வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரி விக்கையில்

கடந்த 24ஆம் திகதி பொசன் தினத்தை முன்னிட்டு நாட்டினு டைய ஜனாதிபதி அரசியல் கைதி கள் 16 பேரை விடுதலை செய்தி ருந்தார். அந்தப் 16 பேரும் ஏற்க னவே நீதிமன்றத்தால் தீர்ப்ப ளிக்கப்பட்டு இன்னும் குறுகிய காலத்தில் தங்களுடைய தண்ட னைக் காலத்தை நிறைவுசெய்து வெளியில் வர இருந்தவர்கள். குறிப்பாக அதில் இரண்டு பேர் மாத்திரமே 4 வருடம் சிறைத் தண் டனை அனுபவிக்க வேண்டியவர் கள் ஏனைய 14 பேரும் ஒரு வரு டத்துக்குள் சிறையிலிருந்து வெளி வர இருந்த வேளையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். என்றாலும் இன்னமும் நீதிமன்ற விசாரணை யில் உள்ள கைதிகள், நீதிமன்றத் தீர்ப்பின் பின்னர் உயர்நீதிமன்றத் தில் மேல்முறையீடு செய்துள்ள கைதிகள் மற்றும் இன்னும் வழக் குத் தாக்கல்செய்யாத கைதிகள் என்று அனைவரையும் மிக விரை வில் விடுதலை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை நான் அர சுக்கு முன்வைக்கின்றேன்.

அரசியல் கைதிகளோடு சேர்த்து தென்னிலங்கையைச் சேர்ந்த ஒரு அரசியல் பிரமுகர் ஒருவரையும் ஜனாதிபதி விடுதலைசெய்துள்ளார். இந்த விடுதலைக்கு ஐ.நா. மற்றும் அமெரிக்கச் செயலகங்கள் எதிர்ப்பை வெளியிடப்பட்டுள்ளன. சட்டத் தரணிகள் கூட குறித்த அரசியல் பிரமுகரின் விடுதலைக்கு ஜனாதி பதியிடம் விளக்கம் கேட்டுள்ளனர். அத்துடன் ஜனாதிபதி ஏற்கனவே தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி மிருசுவில் பகுதியில் பொதுமக்க ளைப் படுகொலைசெய்தவரை நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்பட்ட பின்னர் விடுதலைசெய்துள்ளார். இதுவும் சர்ச்சையாகியிருந்தது.

ஆனால், 1994ஆம் ஆண்டு முதல் 2009ஆம் ஆண்டு போர் முடிவுற்ற பிற்பாடு 2012ஆம், 2013ஆம், 2014ஆம் ஆண்டுக ளில் கைதுசெய்யப்பட்ட 58 பேர் இன்னமும் சிறைக்குள் இருக்கின் றார்கள். எனவே ஜனாதிபதி தன் அதிகாரத்தை பயன்படுத்தி அவர்க ளையும் விரைவில் விடுதலை செய்ய வேண்டும். இந்த புதிய அரசு வந்ததன் பிற்பாடு அண்மை யில் சமூக வலைத்தளங்களில் விடுதலைப் புலிகளுக்கு ஆதர வாக செய்திகளை வெளியிட்டார் கள் என்ற குற்றச்சாட்டில் பலர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளவர்க ளையும் விடுதலைசெய்ய வேண் டும். தற்போது தான் இந்த பயங்க ரவாத தடைச்சட்டம் எவ்வளவு பாதகமானது என்பதை தென்பகுதி சிங்கள மக்கள் உணர்கின்றார் கள்- என்றார். (ப-213)

# கடவுச்சீட்டு தேவையா? இணையத்தில் பதிவிடுங்கள்

கொழும்பு, ஜூன் 29

கடவுச்சீட்டு பெற்றுக்கொள் வதற்காக வருகைதருபவர் கள் இணையத்தின் ஊடாக நாள் ஒன்றை முன்பதிவு செய்து கொள்வதற்கான வசதி ஏற்படுத்திக் கொடுக்கப் பட்டுள்ளது. அதனடிப்படை யில் eservices.immigration.gov.lk/td என்ற இணையத் தின் ஊடாக நாள் ஒன்றை முன்பதிவு செய்துகொள்ள முடியும் என்று தெரிவிக்கப் படுகின்றது. (த-இ)

## இலங்கைக்கு கடத்தவிருந்த

# பல லட்சம் ரூபா பெறுமதியான மருத்துவப் பொருள்கள் மீட்பு!

*சந்தேகத்தில் ஐவர் கைது*



மன்னார், ஜூன் 29

இலங்கைக்கு கடத்துவதற்கென தூத்துக்குடியில் இருந்து கீழக் கரைக்கு வாகனத்தில் கொண்டு வரப்பட்ட சுறா துடுப்பு, ஏலக்காய் மற்றும் பதப்படுத்தப்பட்ட கடல் அட்டை ஆகியவற்றை நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை கைப்பற்றிய மெரைன் பொலிஸார் கடத்தல் சம்பவத்தி துடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் ஐவரைக் கைதுசெய்தனர்.

இராமேஸ்வரத்துக்கு அருகே இலங்கை உள்ளதால் தமிழகத் தில் இருந்து கஞ்சா, கடல் அட்டை, பீடி இலை, மற்றும் கடல் பல்லி உள்ளிட்டவை இலங்கைக்கும், அதேபோல் இலங்கையில் இருந்து தங்கக் கட்டிகள் தமிழ கத்துக்கும் கடல் வழியாக கடத் தப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்படும் நிலையில் தூத்துக்குடி, காயல் பட்டினத்தில் இருந்து இராமநாதபுரம் வந்த சரக்கு வாகனத்தை திருப்புல் லாணி அருகே தேவிபட்டினம் மெரைன் பொலிஸார் நிறுத்தி சோதனைசெய்தபோது வாக னத்தில் தலா 30 கிலோ வீதம் 15 மூடைகளில் இருந்த 450 கிலோ தடைசெய்யப்பட்ட சுறா இறக்கை, மற்றும் தலா 50 கிலோ வீதம் 5 மூடைகளில் இருந்த 250 கிலோ ஏலக்காய் ஆகியவை மீட்கப்பட்டுள்ளன.

இதனையடுத்து வாகனச் சாரதியி டம் பொலிஸார் விசாரணை களை மேற்கொண்டனர். விசா ரணை களின் பின்னர் பதப்ப டுத்திய நிலையில் இருந்த 55 கிலோ கடல் அட்டைகள் பறி முதல் செய்யப்பட்டன. இப் பொ ருள்கள் அனைத்தும் மருத்துவ பயன்பாட்டுக்காக கீழக்கரையில் இருந்து கடல் வழியாக இலங் கைக்கு கடத்த இருந்தன என தெரிய வந்தது. இந்தச் சம்பவம் தொடர்பில் ஐவர் கைது செய்யப்பட் டுள்ளனர் என்று மெரைன் பொலி ஸார் தெரிவித்தனர். (ப-56)



# தீக்கிரையானது வியாபார நிலையம் உரிமையாளருக்கு உதவித்தொகை

கிளிநொச்சி, ஜூன் 29

கிளிநொச்சி முழங்காவில் பகுதியில் தீயில் எரிந்த வியாபார நிலையத்தின் உரிமையாள ருக்கு கரைச்சி பிரதேச சபையின் உறுப்பினர் எஸ்.ஜீவனால் நிதி உதவி வழங்கப்பட்டுள் ளது.

கிளிநொச்சி முழங்காவில் பொது அங்காடி யில் வியாபாரம் செய்துவரும் எஸ்.ஞானசே கரம் என்பவரின் வியாபார நிலையம் அண் மையில் தீப்பிடித்து எரிந்தது. இதனால் அங்கிருந்த பொருள்கள் அனைத்தும் தீயில் எரிந்து அழிந்தன. இதனை அடுத்தே குறித்த வியாபார நிலையத்தின் உரிமையாளருக்கு நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

நிகழ்வில் கரைச்சி பிரதேச சபைத் தவிசாளர் அ.வேழமாலிதன், பூநகரி பிரதேச சபையின் உறுப்பினர் சி.சிறிரஞ்சன், பூநகரி பிரதேச அமைப்பாளர் த.குவேந்திரன், மற்றும் பரந் தன் வர்த்தக சங்கத் தலைவர் [illegible] ஆகியோர் கலந்துகொண்டனர். (ப-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொவிட் சுகாதார நடைமுறை வி.ஐ.பி.களுக்கு பொருந்தாதா?

## சாவ. பிரதேச சபை உறுப்பினர் கேள்வி

கொடிகாமம், ஜுன் 29

தற்போதைய கொவிட்-19 தொற்று அதிகரித்துச்செல்லும் நிலையில் கரவெட்டி முள்ளிப் பகுதியில் சேதனப்பசளை தயாரிப்பு நிலையம் திறப்பு விழாவில் அமைச்சர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட நூற்றுக்கணக்கானோர் பங்கேற்றுள்ளனர். பருத்தித்துறை சுகாதாரப் பிரிவினருக்கு இது தெரியவில்லையா? இவர்களுக்கு தனிமைப்படுத்தல் இல்லையா என சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் இ.யோகேஸ்வரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கோவில்கள், திருமண நிகழ்வுகள், மற்றும் மரணச் சடங்குகள் ஆகிய வற்றில் குறிப்பிடத்தக்க வகையில் குறைந்தளவு மக்கள் தான் கலந்து கொள்ள வேண்டும் என வரைய றுக்கப்பட்டு சுகாதார நடைமுறைக ளைப் பின்பற்றாதவர்களுக்கு தனிமைப்படுத்தல் மற்றும் கைது செய்தல் போன்ற சட்ட நடவடிக்கை களை மேற்கொள்ளும் சுகாதாரப் பிரிவினர் மற்றும் பொலிஸார், சேதனப்பசளை தயாரிக்கும் நிலை யத் திறப்பு விழாவில் சமூக இடை வெளி பேணப்படாமல் கலந்து கொண்டவர்கள்மீது ஏன் நடவ டிக்கை எடுக்கவில்லை என்றார்.

குறித்த நிகழ்வில், இளைஞர் மற் றும் விளையாட்டுத்துறை அமைச் சர் நாமல் ராஜபக்ச, இராஜாங்க



அமைச்சர்களான ரொஷான் ரண சிங்க, மற்றும் அருந்திக பெர் னாண்டோ வடமாகாண ஆளுநர் திருமதி பீ.எச்.எம் சாள்ஸ் நாடா ளுமன்ற உறுப்பினர்களான அங் கஜன் இராமநாதன், எம்.ஏ. சுமந் திரன், தர்மலிங்கம் சித்தார்த்தன், மற்றும் பிரதேச சபை உறுப்பினர் கள், உட்பட அரச அதிகாரிகள் ஆதரவாளர்கள் என நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (ப-159)





## தடுப்பூசி ஏற்றுவதற்கு திரண்டது மக்கள் கூட்டம்

சாவகச்சேரி ஜுன் 29

கொவிட்- 19 இரண்டாம் கட்ட தடுப்பூசி ஏற்றுவதில் தென்மராட்சி பிரதேச மக்கள் ஆர்வத்துடன் காணப் பட்டனர்.

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத் தால் நேற்று கொடிகாமம் மருத்துவமனையிலும் கைதடி மருத்துவமனையிலும் இரண்டாம் கட்டத் தடுப்பூசி ஏற்றுவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டன.

கைதடி மருத்துவமனையில் கைதடி தெற்கு மற்றும் நாவற்குழி மேற்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவு மக்களுக்கும், கொடிகாமம் மருத்துவமனையில் தென்மராட்சி கிழக்கு பிரதேசத்தின் உசன், கரம்பகம், மிருசுவில் வடக்கு மற்றும் மிருசுவில் தெற்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவு மக்களுக்கும் இரண்டாம் கட் டத் தடுப்பூசி நேற்று ஏற்றப்பட்டது.

இதேவேளை நாளை தொடக்கம் வெள்ளிக்கிழமை வரை சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணி யகம் மற்றும் கொடிகாமம் மருத்துவமனை ஆகிய இடங்களிலும், ஜுலை மூன்றாம் திகதி சாவகச்சேரி மருத்துவமனையிலும் இரண்டாம் கட்டத் தடுப்பூசி ஏற்றப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது. (ப-9)

## அலுவலர்களின் விவரம் சேகரிப்பு

யாழ்ப்பாணம், ஜுன் 29

யாழ்.மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளில் கடமையாற்றும் திணைக்களம் சார் அலுவலர்களின் விவரங்கள் யாழ். பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் பணியகத்தால் திரட்டப்படுகின்றன.

உள்ளூராட்சி சபைகள் மற்றும் உப பணியகங்கள் போன்றவற்றில் கடமையாற்றும் சனசமூக அபிவிருத்தி அலுவலர், ஆய்வு அலுவலர், உள்ளூராட்சி உதவியா ளர், வருமானப் பரிசோதகர் மற்றும் முன்பள்ளி ஆசி ரியர்கள் ஆகியோரின் விவரங்களை அனுப்பி வைக் குமாறு உள்ளூராட்சி சபைகளுக்கு அறிவிக்கப்பட்டுள் ளது. (ப-9)

## கொரோனாத் தொற்றால் இறந்த உடல் பூந்தோட்டத்தில் தகனம்

வவுனியா, ஜுன் 29

கொவிட் தாக்கத்தால் வவுனியா, மருத்துவ மனையில், உயிரிழந்த நபரின் சடலம் பூந் தோட்டம் மின்சார மயானத்தில் நேற்று தகனம் செய்யப்பட்டது.

வவுனியா, தவசிகுளம் பகுதியில் வசிக்கும் 85 வயதுடைய நபர் ஒருவர் வவுனியா மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் கொவிட் தொற்று உறுதிசெய்யப்பட்டது. இதனை யடுத்து வவுனியா மருத்துவமனை கொவிட் சிகிச்சை விடுதியில் சிகிச்சைபெற்று வந்த நிலை யில் நேற்றுமுன்தினம் மாலை சிகிச்சை பய னின்றி உயிரிழந்தார்.

உயிரிழந்த நபரின் சடலம் சுகாதாரப் பிரிவின ரால் எடுத்துச்செல்லப்பட்டு வவுனியா நகர சபையின் பூந்தோட்டத்தில் அமைந்துள்ள மின் சார மயானத்தில் சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி தகனம் செய்யப்பட்டது. (ப-18)





## தடுப்பூசியை விரைவுபடுத்தினால் பாடசாலைகளை ஆரம்பிக்கலாம்

### கல்வி அமைச்சு ஆலோசனை

கொழும்பு, ஜுன் 29

பாடசாலை மாணவர்களுக்கு வெகு விரைவில் தடுப்பூசிகளை செலுத்தி னால், ஜுலை மாதம் பாடசாலை களை ஆரம்பிக்க முடியும் என்று கல்வி அமைச்சின் செயலாளர் கபில பெரேரா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாடசாலை மாணவர்களுக்கு உட னடியாக தடுப்பூசி செலுத்தி, பாட சாலைகளை ஆரம்பிப்பதற்கு கல்வி அமைச்சு அவதானம் செலுத்தியுள்ளது.

7 லட்சம் தடுப்பூசிகள் 11, 12 மற்றும் 13ஆம் வகுப்பு மாணவர்களுக்கு செலுத்தப்படும். பாடசாலை ஆரம் பிப்பதற்கு முன்னர் அனைத்து ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை ஊழியர்கள் அனைவருக்கும் தடுப் பூசி செலுத்தப்படும்.

வெகுவிரைவில் தடுப்பூசிகளைச் செலுத்தினால், ஜுலை மாதம் பாட சாலைகள் ஆரம்பிக்க முடியும். எவ்வாறாயினும் திகதியை தற் போது கூறமுடியாது. இரண்டு தடுப் பூசிகளையும் வழங்க முடியா தென்றாலும், ஒரு தடுப்பூசியை வழங்கியாவது பாடசாலைகளை ஆரம்பிக்க முடியும்.

அதேவேளை புலமைப்பரிசில் பரீட்சை, சாதாரண தரப் பரீட்சை மற்றும் உயர்தரப் பரீட்சை ஆகிய வற்றைப் பிற்போடுவதற்கு எந்தத் தீர்மானங்களும் மேற்கொள்ளப்ப டவில்லை. எதிர்வரும் நாள்களில் ஏற்படும் நிலைமைகளைக் கருத் தில் கொண்டு இந்த விடயம் தொடர் பில் தீர்மானங்கள் எடுக்கப்படும் - என்றார். (ம-4)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



# இரட்டைக் குடியுரிமை பஸிலுக்கு சிக்கல்

## நாலக தேரர் எதிர்ப்பு

கொழும்பு, ஜூன் 29

பஸில் ராஜபக்ச நாட்டு மக்களுக்கு சேவையாற்ற நினைத்தால், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவைப் போன்று அமெரிக்கக் குடியுரிமையை துறக்க வேண்டும் என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் பெங்கமுவே நாலக தேரர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இரட்டைக் குடியுரிமையைக் கொண்டவர்கள் அரச நிர்வாகத்திலும், அரசியலிலும் பங்குப்பற்றுவது தவறானதாகும். இரட்டைக் குடியுரிமையையுடைவர்கள் அரசியலில் ஆதிக்கம் செலுத்துவது நாட்டுக்கு எதிரான செயற்பாடாகும். முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ச நாடாளுமன்ற உறுப்பினராகி, நாட்டுக்கு சேவையாற்றுவது வரவேற்கத்தக்கது.

ஆனால் நாட்டின் நலனைக் கருத்தில் கொண்டு இரட்டைக் குடியுரிமை உடையவருக்கு அரசியலில் அனுமதியளிக்க முடியாது - என்றார். (4)

# 69 நிமிடங்கள் நேரத்தை வீணடித்தார் ஜனாதிபதி

## திஸ்ஸ அத்தநாயக்க விசனம்

**கொழும்பு, ஜூன் 29**

**ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் தேசிய உரை அர்த்தமற்றது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதியால் நாட்டுக்கு மக்களுக்கு ஆற்றப்படும் தேசிய உரையானது முக்கியத்துவம் மிக்கதாக இருக்க வேண்டும். தேசிய ரீதியில் மட்டுமல்ல, சர்வதேச மட்டத்திலும் அவ்வுரை தொடர்பில் கவனம் செலுத்தப்படும்.

இந்த நிலையில் நாட்டின் பொருளாதாரத்தை மீட்பதற்கான வழிமுறைகள் எவை, கொரோனா நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள தமக்கு எவ்வாறான நிவாரணங்கள் வழங்கப்படும், நடைமுறையில் உள்ள அடிப்படைப் பிரச்சினை களுக்குத் தீர்வுகள் எவை என்பவற்றுக்கான முன்மொழிவுகளை ஜனாதிபதியின் உரை ஊடாக நாட்டு மக்கள் எதிர்ப்பார்த்தனர்.

ஆனால் இவை குறித்து உரிய அறிவிப்புகள் வெளியாகவில்லை. ஜனாதிபதியின் உரை 69 நிமிடங்கள் இடம்பெற்றன. அரச தலைவரொருவரின் தேசிய உரை இவ்வளவு பெரிதாக இருந்த சந்தர்ப்பமாகவும் இது பதிவாகியுள்ளது. அவ்வாறு நேரமெடுத்து ஆற்றிய உரையில், மக்களுக்கு பயனளிக்கும் வகையில் எதுவும் இல்லை. அர்த்தமற்ற உரையாகவே அது அமைந்தது.

அதேவேளை, எதிர்க்கட்சித் தலைவரால் எழுப்பட்ட 6 கேள்விகளுக்கும் பதில்கள் வழங்கப்படவில்லை. ஜனாதிபதியின் உரை குறித்து நாட்டுமக்களுக்குதிருப்தி இல்லை. எமக்கும் திருப்தி இல்லை- என்றார். (4.44)

# அரசின் இயலாமையை வெளிப்படுத்திய கோத்தா

## எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 29



ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சவின் நாட்டு மக்களுக்கான உரையில் அரசின் இயலாமையும், தோல்வியும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதியின் உரைக்கு முன்னர், எரிபொருள்கள் விலை அதிகரிப்பு மற்றும் பொதுமக்களுக்கு நிவாரணம் உட்பட ஆறு யோசனைகளை நான் முன்வைத்தேன். ஜனாதிபதி அவற்றுக்கு பதில் அளிப்பதைத் தவிர்த்துள்ளார்.

அரசால் தீர்வுகளை முன்வைக்க முடியாவிட்டால், பதவி விலகி மாற்று அரசிடம் ஆட்சியை ஒப்படைக்க வேண்டும். நாங்கள் அதிகாரத்தைப் பொறுப்பேற்று மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வை வழங்கி, நாட்டை ஆட்சி செய்யத் தயார்- என்றார். (4)

# மஹிந்த புகழ்பாடும் கோத்தா அதிகாரத்தைப் பறித்தது ஏன்?

## ஐ.தே.க. விசனம்

கொழும்பு, ஜூன் 29

நாட்டு மக்களுக்காக ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச ஆற்றிய உரையில் மஹிந்தவின் புகழ் பாடியுள்ளார். ஆனால் 20ஆவது திருத்தத்தின் மூலம் பிரதமருக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தை மட்டும் ஏன் பறித்தார்?. அவ்வாறெனில் பிரதமர் மீது அவருக்கு நம்பிக்கை இல்லையா? இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சி கேள்வி எழுப்பியுள்ளது.

இது தொடர்பில் கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

මහින්ද... 

எக்சத் ஜாதிக பக்ஷய
ஐக்கிய தேசியக் கட்சி
UNITED NATIONAL PARTY

மஹிந்த ராஜபக்சவின் ஆட்சியில் நாட்டின் பொருளாதாரம் சிறப்பாகக் காணப்பட்டது என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார் அவர் தெரிவிப்பது உண்மையென்றால் அவருக்கான அதிகாரத்தை மட்டும் ஏன் பறித்தார். ஜனாதிபதி தனது பொருளாதார நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக பி.பி.ஜயசுந்தரவை நியமித்துள்ளார். அவ்வாறெனில் ஜனாதிபதிக்கு பிரதமர்மீதும் தனது அமைச்சரவைமீதும் நம்பிக்கை இல்லையா? தனது உரையில் பொதுமக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வை முன்வைக்கவில்லை. ஆனால் பொதுமக்களின் மீது குற்றச்சாட்டுகளை முன்வைப்பதற்காகவும், தனது அரசு ஏன் தோல்வியடைந்தது என்பதற்கான சாக்குப் போக்குகளை முன்வைப்பதற்காகவும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தியுள்ளார்- என்றுள்ளது. (4)

# கமநல நிலையத்துக்கு குறைந்தளவு உரம்

முல்லைத்தீவு, ஜூன் 28

2 ஆயிரத்து 700 ஏக்கர் நிலப்பரப்பில் செய்கை பண்ணப்பட்ட முல்லைத்தீவு கமநல சேவை நிலையத்துக்குட்பட்ட சிறுபோக நெற் செய்கையில் 240 ஏக்கருக்குரிய உரம் கிடைக்கப்பெற்றுள்ளது என்று குமுழமுனை கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜெ.சயேந்திரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

தற்போது கிடைக்கப்பெற்றுள்ள உரம் 240 ஏக்கருக்கு விநியோகிக்கக் கூடியதாக இருக்கும். யூரியா 12.155 மெற்றிக்தொன், அடி உரம் 0.735 மெற்றிக் தொன் மற்றும் பொட்டாசியம் 4.0322 மெற்றிக்தொன் ஆகியவையே கிடைக்கப் பெற்றுள்ளன.

இந்த உரத்தை 240 ஏக்கருக்கே விநியோகிக்க முடியும். யூரியா மிகக் குறைந்த அளவில் கிடைக்கப் பெற்றுள்ளதால், கிடைக்கப்பெற்றுள்ள உரம் பகிர்ந்தளிக்கப் பட உள்ளது.

இதேவேளை 20 மெற்றிக் தொன் உரத்தைப் பெற்று விவ்சாயிகளுக்கு வழங்குவதற்கு மாவட்டச் செயலாளர் அனுமதி தந்துள்ளார் - என்றார். (ப-13)

# தேசியப்பட்டியல் உறுப்பினரின் பதவிக்காலத்தை நிர்ணயிக்குக

## கபே அமைப்பு கோரிக்கை

கொழும்பு, ஜூன் 29

உள்ளூராட்சி மன்றங்களுக்கு மேலதிக பட்டியலின் ஊடாக நியமிக்கப்படும் பிரதிநிதிகளுக்கு உத்தியோகபூர்வ காலஎல்லை தொடர்பாக, உரிய சட்டம் இயற்றப்பட வேண்டும் என்று கபே அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் நிறைவேற்றுப் பணிப்பாளர் மனாஸ் மக்கீன் தெரிவிக்கையில்,

உள்ளூராட்சி மன்ற புதிய தேர்தல் சட்டத்தின் மூலமாக உள்ளூராட்சி மன்றங்களுக்கு கடந்த காலங்களை விட அதிகமான உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இவர்கள் வட்டார ரீதியாகவும், நேரடியாகவும் தேர்தலில் போட்டியிட்டும், அதேநேரம் அந்தக் கட்சிகள் பெறக்கூடிய வாக்குகளின் விகிதாசார அடிப்படையிலும் மேலதிக பட்டியல் ஊடாக உள்ளூராட்சி மன்றங்களுக்கு பிரதிநிதிகளாக தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

இவ்வாறு மேலதிக பட்டியலின் ஊடாக உள்ளூராட்சி மன்றங்களுக்கு நியமிக்கப்படுகின்ற பிரதிநிதிகளை வருடா வருடம் விலகக்கூறி, புதிய உறுப்பினர்களை நியமிக்கின்ற செயற்பாடுகளை சில கட்சிகளும், சுயேட்சைக் குழுக்களும் பின்பற்றி வருகின்றன. அதனால் வருடாவருடம் பிரதிநிதிகள் மாற்றப்படுகின்றனர். இந்த நிச்சயமற்ற நிலையான குறிப்பிட்ட பிரதேசத்துக்கான அபிவிருத்திகளை மேற்கொள்வதில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்க வேண்டிய நிலைமையும் ஏற்பட்டுள்ளது. அதேவேளை உள்ளூராட்சி மன்ற சட்டதிட்டங்களையும், முழுமையான அனுபவத்தையும் பெற முடியாதவர்களாக அந்த உறுப்பினர்களின் நிலை காணப்படுகின்றது. எனவே தேர்தல் சட்ட மறுசீரமைப்புத் தொடர்பாக ஆராய்கின்றபோது, தேசியப்பட்டியலின் ஊடாக நியமிக்கப்படுகின்ற உறுப்பினர்களின் உத்தியோகபூர்வ கால எல்லைகள் தொடர்பாக ஆராய்வது மிக முக்கியமான விடயம்- என்றார். (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## சந்தி சிரிக்கும் காட்சிகள்


90 களுக்குப் பின்னர் இலங்கையின் வரலாற்றையும் கிரிக்கெட்டையும் பிரிக்கமுடியாது. உலகின் மிகச் சிறிய நாடொன்று (இலங்கை), பலம் மிக்க அணிகளை வீழ்த்தி 1996 இல் உலகக் கிண்ணத்தை வென்ற பின்னர், கிரிக்கெட் உலகின் தவிர்க்க முடியாத சக்தியாக உருவெடுத்தது. சனத் ஜெயசூரிய, அரவிந்த டீ சில்வா, அர்ஜூன ரணதுங்க, அத்தப்பத்து, முரளிதரன் , களுவிதாரன, மகாநாம என்று உலகை கலக்கிய வீரர்களைக் கொண்ட அணி அதன் பின்னரும் தன் ராஜநடையைத் தொடரவே செய்தது. வெறுமனே விளையாட்டாக மட்டுமல்லாது , இலங்கை அரசியலிலும் கிரிக்கெட் தாக்கம் செலுத்தியது. “சனத் ஜெயசூரியா அடிக்கும் ரன் விகிதத்தைக் கணித்தே விலைவாசியை சந்திரிகா அதிகரிப்பார்” என்று நகைச்சுவையாகச் சொல்லுமளவுக்கு கிரிக்கெட் இலங்கை மக்களைக் கட்டிப் போட்டு வைத்திருந்தது.

இடைக்கிடையே சின்னச் சின்ன வீழ்ச்சிகளைச் சந்தித்தாலும் பின்னர் வந்த சங்ககார, மஹேல ஜெயவர்த்தன, டில்ஷான், ரஸல் ஆர்னோல்ட், ஹேரத் , மத்யூஸ் போன்ற கிரிக்கெட்டின் ஆதர்ச நாயகர்கள் இலங்கை அணியைத் தாங்கி நின்றனர். ஆனால் அதுவொரு அழகிய கனாக் காலம் போல, இப்போது இலங்கை கிரிக்கெட் மிக மோசமான நிலைக்குச் சென்றுவிட்டது. எந்தவொரு அணியும் எப்போதும், தனிக்காட்டு ராஜாவாக உலாவர முடியாது தான். அவ்வப்போது வீழ்ச்சிகளையும் சந்திப்பதென்பது வழமையே. ஆனால் இப்போது இலங்கை அணி சந்திப்பது வெறும் வீழ்ச்சியல்ல, இனி மீண்டெழவே முடியாத படுகுழியை தனக்குத்தானே தோண்டிக் கொண்டிருக்கிறது.

வீரர்களுக்கு ஏற்படும் காயங்கள், உபாதைகள், செயற்றிறன் குன்றல், அரசியல் தலையீடுகள், அணிக்குள் ஏற்படும் ஒற்றுமையீனம், அதிகாரப் போட்டி, வீரர்களிடம் போராட்டக் குணமின்மை போன்ற காரணிகளே இதுநாள் வரை இலங்கைக் கிரிக்கெட்டின் தொடர் வீழ்ச்சிக்கு காரணம் என நம்பிக்கொண்டிருந்தோம். ஆனால் கடந்த ஞாயிற்றுக்கிழமை இங்கிலாந்தின் டுர்கம் நகரில் எடுக்கப்பட்ட காணொலி ஒன்று, இலங்கை வீரர்களின் சுய ஒழுக்கமின்மையையும், அணிக்கான அர்ப்பணிப்பின்மையையும் பட்டவர்த்தனமாக்கியுள்ளது.

இந்தக் காணொலி எடுக்கப்படுவதற்கு முதல்நாள் நடந்த மூன்றாவது ‘ரி20’ ஆட்டத்தில் இலங்கை அணி படுதோல்வியடைந்து, 3:0 என்ற கணக்கில் தொடரை மோசமான முறையில் இழந்திருந்தது. சிறுபிள்ளைகள் போல , ஏனோ தானோவென்று விளையாடிய இலங்கை அணி வீரர்களை பார்த்து கடுப்பான வர்ணனையாளர், சக வர்ணனையாளராக இருந்த இலங்கை அணியின் முன்னாள் தலைவர் சங்ககாரவிடம் “ இவர்கள் தான் உங்கள் நாட்டில் சர்வதேச கிரிக்கெட்டுக்கு தகுதியான வீரர்களா? வேறு ஆள்கள் இல்லையா?” என்று கேட்டார். எத்தனையோ சாதனைகளைப் படைத்த சங்ககாரவால் சில நிமிடங்கள் எதுவும் பேசமுடியவில்லை. அப்படி ஒரு முன்னாள் வீரரே அணியின் இப்போதையை நிலைபற்றி விக்கித்து போகையில், அந்தத் தோல்விகளுக்கு காரணமான வீரர்களோ அதைப் பற்றிய அக்கறையேதுமின்றி, உயிர்ப் பாதுகாப்பு வளையத்தை மீறி வெளியே வந்து, புகைத்தல் முதலான மோசமான செயல்களில் நள்ளிரவில் ஈடுபட்டதை அந்தக் காணொலி வெளிப்படுத்தியிருந்தது.

இதனையடுத்து, இந்தச் செயலில் ஈடுபட்ட இலங்கை அணியின் மூன்று வீரர்கள் அணியில் இருந்து தற்காலிகமாக நீக்கப்பட்டு, நாட்டுக்கு திருப்பி அழைக்கப்பட்டுள்ளனர். ஒருகாலத்தில் எப்படி இலங்கை அணியின் பெயர் கொடிகட்டிப் பறந்ததே, இன்று அதற்கு நேர்மாறாக களங்கப்பட்டு நிற்கின்றது. இத்தனைக்கும் விளையாட்டுத்துறை அமைச்சராக இருக்கும் நாமல் ராஜபக்ச, எதிர்கால ஜனாதிபதிக் கனவில் இருக்கும் ஒருவர். அவரது அமைச்சுக்கு உட்பட்ட கிரிக்கெட்டில் இவ்வளவு மோசமான பெறுபேற்றையும், நடத்தையையும் கொண்டிருக்கும் அணிக்கு அவரும் பொறுப்பேற்றேயாக வேண்டும். தனியே மூன்று வீரர்களும் மாத்திரம் தண்டிக்கப்படுவதால் மாத்திரம் அணியின் நற்பெயர் திரும்பிவிட்டப்போவதில்லை. ஆட்சிதான் சந்தி சிரிக்குமளவுக்கு இருக்கின்றதென்றால், விளையாட்டிலும் அப்படியான நிலையைத் தொடரவிடக்கூடாது. இனிமேல் இப்படியான அசிங்கங்கள் அரங்கேறாமல் இருப்பதற்கும், அணியின் போராட்டக் குணத்தை மீட்டெடுக்கவும் செய்யவேண்டிய காரியங்களை அரசியல் ஆதாயங்களுக்கு அப்பால் சிந்திக்க வேண்டிய தருணமிது.




# 200 ஏக்கரில் அடாத்தாக சிறுபோக நெற்செய்கை

## நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

**முல்லைத்தீவு, ஜூன் 29**

**முல்லைத்தீவு குமுழமுனை கமநல சேவை நிலைய பிரிவுக்குட்பட்ட பகுதியில் 200 ஏக்கர் வரையான நிலப்பரப்பில் அனுமதியற்ற சிறுபோக நெற்செய்கையில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.**



சிறுபோக நெற்செய்கைக் கூட்டத்தில் 2 ஆயிரத்து 700 ஏக்கருக்கு மட்டும் அனுமதிகள் வழங்கப்பட்டுள்ள நிலையில், அனுமதிகள் பெறாமல் 200 ஏக்கர் வரையான நிலப்பரப்பில் நெற்செய்கை தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று குமுழமுனை கமநல சேவை நிலைய புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறான அனுமதியற்ற பயிர்ச்செய்கைக்கு மாவட்டச் செயலகம் அனுமதி வழங்கவில்லை. இவ்வாறான அடாத்தான பயிர்ச்செய்கை, நேர்மையான பயிர்ச்செய்கையில் ஈடுபடுகின்ற விவசாயிகளைப் பாதிக்கின்றது. அனுமதியற்ற பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள்மீது மாவட்டச் செயலகம், விவசாயத் திணைக்களம், கமநல சேவை நிலையம், மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களம் ஆகியவை நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் சிறுபோக நெற்செய்கைக் கூட்டத் தீர்மானங்களை அதிகாரிகள் இறுக்கமாகக் கடைப்பிடிக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ப-13)

# அக்கராயன் குளத்தின் சீரமைப்புகள் ஆரம்பம்

கிளிநொச்சி - அக்கராயன் குளத்தின் வான்பகுதியில் ஏற்பட்ட சேதங்கள் தற்போது சீரமைக்கப்பட்டு வருகின்றன. கடந்த 2010ஆம் ஆண்டில் ஜப்பானிய அரசின் நிதி உதவியில் ரூபா 350 மில்லியன் நிதியில் அணைக்கட்டு உயர்த்துதல், குளத்தின் வான் பகுதியில் காணப்பட்ட பெரும் குழியை மூடுதல் மற்றும் நீர்ப்பாசன வாய்க்கால்களில் முக்கிய இடங்களில் சிமெந்திலான கொங்கிறீட் வாய்க்கால்களை அமைத்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும் குளத்தின் வான் வெள்ளம், வான் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த கட்டுமானங்களை மூன்று தடவைகளுக்கு மேல் சிதைத்ததன் காரணமாக கிளிநொச்சி நீர்ப்பாசனத் திணைக்களத்தால் தொடர்ச்சியாக இக் கட்டுமானங்கள் சீரமைக்கப்பட்டபோதிலும் சில இடங்களில் நீரின் வேகத்தால் கட்டுமானங்கள் உடைவடைந்த நிலையில் காணப்பட்டன. தற்போது கிளிநொச்சி மேற்கு



நீர்ப்பாசனப் பிரிவுக்குள் அக்கராயன்குளம் உள்ளடங்குவதால், வான் பகுதியில் ஏற்பட்ட சேதங்கள் சீரமைக்கப்பட்டு வருகின்றன. இதேவேளை அக்கராயன் குளத்தில் இருந்து குடமுருட்டி வரையான அக்கராயன் ஆற்றுப் பகுதி துப்பரவுசெய்யப்பட வேண்டும் என்று இக்குளத்தின் கீழான விவசாயிகள் தொடர்ச்சியாகக் கோரிக்கைவிடுத்து வருகின்றனர். கடந்த ஆண்டு அக்கராயன் தாழ்பாலப் பகுதியில் இருந்து குறிப்பிட்டளவு தூரம் அக்கராயன் ஆறு துப்பரவுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ப-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருதமடு திருவிழா

# மன்னார் மாவட்டத்தவருக்கும் திருப்பலியில் பங்குபற்றத் தடை

*ஆயர் இம்மனுவல் பெர்னாண்டோ ஆண்டகை தெரிவிப்பு*

**மன்னார், ஜூன் 29**

**மருதமடு ஆடி மாத பெருவிழாவுக்கு வெளிமாவட்ட பக்தர்கள் கலந்துகொள்ளத் தடை விதிக்கப்பட்டிருக்கும் நிலையில், மன்னார் பிரதேச செயலக பிரிவு உள்ளிட்ட ஒரு சில பகுதிகளில் கொரோனா அதிக அபாய இடமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளதால் அந்தப் பகுதியிலிருந்தும் பக்தர்கள் மருதமடு விழா திருப்பலிகளில் கலந்துகொள்ள தடை விதிக்கப்பட்டுள்ளது என்று மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மனுவல் பெர்னாண்டோ ஆண்டகை தெரிவித்தார்.**



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

மன்னார் மாவட்டச் செயலர் தலைமையில் மன்னார் மறைமாவட்டத்தின் மருதமடு திருத்தலத்தில் நேற்று இடம்பெற்ற மன்னார் மறைமாவட்டத்தின் மருதமடு பெருவிழாவைவிட்டு ஒரு சில தீர்மானங்களை எடுத்துள்ளோம். கடந்த ஆறு நாள்களாக நடைபெற்ற நவநாள்களுக்குகூட ஆறு, ஏழு பேர்தான் கலந்துகொண்டனர். இருந்தும் இவ் நவநாள்களில் தமிழ் மற்றும் சிங்கள மொழிகளிலே ஆராதனைகள் இடம்பெற்றுள்ளன. திருவிழாக்களை நாங்கள் இணையத்தளங்கள் ஊடாக ஒளிபரப்புச் செய்கின்றோம். இம்முறை நடைபெறும் இந்தத் திருவிழாவுக்கு வேறு மாவட்டங்களிலிருந்து பக்தர்கள் வருவதற்கு எமக்கு அனுமதி வழங்கப்படவில்லை. இதுவிடயமாக கடந்த கூட்டங்களில் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கு அமைவாக இந்தத் திருவிழா திருப்பலிக்கு 30 பேர் மட்டும் கலந்துகொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் மன்னார் மாவட்டத்திலும் சில பகுதிகள் கொரோனா அபாயப் பகுதிகளாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. எனவே அதிக அபாயமுள்ள குறித்த பகுதிகளிலிருந்தும் பக்தர்கள் விழா தொடர்பாக நடைபெறும் திருப்பலியில் கலந்துகொள்ளத் தடைவிதிக்கப்பட்டுள்ளது-என்றார். (ப-60,56)

# நாட்டின் மீட்சி ஐ.தே.கவிடம்

*மார்தட்டுகிறார் ரணில்*

கொழும்பு, ஜூன் 29



நாட்டை அனைத்து வகையிலும் முன்னேற்றும் திறன் எமது கட்சிக்கு மட்டுமே உள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்திக்கு ஆதரவு வழங்கியமைக்காக நீக்கப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கு பதிலாக நியமிக்கப்பட்டுள்ள உறுப்பினர்கள், ஐக்கிய தேசிய கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று பதவிப் பிரமாணம் செய்தனர்.

நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்,

சம்பிரதாயமாக முன்னெடுக்கப்படும் அரசியலை மக்கள் புறக்கணிக்க ஆரம்பித்துள்ளனர். மதம், இனம் ஆகிவற்றை பிரதானமாகக் கொண்டு அரசியில் ஈடுபடுகின்றமை, தீர்வை வழங்காமல் ஒருவர் மீது ஒருவர் குறை கூறுவது உள்ளிட்ட செயற்பாடுகள் பிரயோசனமற்றவை என்பதை மக்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

225 நாடாளுமன்ற உறுப்பினர்களையும் தியவன்னா ஓயாவில் தள்ளிவிட வேண்டும் என்ற எண்ணமே தற்போது மக்கள் மத்தியில் காணப்படுகின்றது. அந்த நிலைப்பாடு சாதாரணமானதாகும். காரணம் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்கப்படவில்லை.

எதிர்பார்ப்புக்கள் நிறைவேற்றப்படவில்லை. அரசு மாத்திரமல்ல எந்தவொரு அரசியல் கட்சியும் இதனைச் செய்யவில்லை. இதனை நினைவில் கொண்டு நாம் செயற்பட வேண்டும். ஐக்கிய தேசியக் கட்சி அந்த நிலைக்குத் தள்ளப்படக்கூடாது.

எந்தச் சந்தர்ப்பத்திலும் புதிதாகச் சிந்தித்து புதியவற்றைச் செய்வது ஐக்கிய தேசியக் கட்சி ஆகும். ஐக்கிய தேசியக் கட்சிக்கு இதற்கான தீர்வுகளை வழங்க முடியும். தற்போதுள்ள நிலைமையிலிருந்து மீள்வதே இன்று முதன்மைத் தேவையாகவுள்ளது. அனைவருக்கும் சுகாதாரப் பாதுகாப்பை வழங்க வேண்டும் - என்றார். (ம-4)

*கௌதாரிமுனையில்*

## போக்குவரத்துக்கு இடையூறான மணல் திட்டு அகற்றப்பட்டு கிராத்துக்குள்ளேயே விற்பனை

*பூநகரி பிரதேச சபைத் தவிசாளர் தெரிவிப்பு*

கிளிநொச்சி, ஜூன் 29

பூநகரி கௌதாரிமுனையில் அமைந்துள்ள மணல் திட்டால் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ள நிலையில், அதன்ன சீர்செய்வதற்கான அனுமதியை கனியவளத் திணைக்களம் இழுத்தடிக்கின்றது. இதனால், கிராமத்திற்குள்ளேயே மணலை விற்பனைசெய்து அதில் வரும் நிதியை பிரதேச சபை பெற்றுக்கொள்ளவுள்ளது என்று பூநகரி பிரதேச சபைத் தவிசாளர் ஐயம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கௌதாரிமுனை கிராமத்தில் இயற்கையாகக் காணப்படும் மணல் திட்டு சரிந்து போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. குறித்த கிராமத்துக் கான ஒரேயொரு போக்குவரத்துப் பாதையாகக் காணப்படும் குறித்த வீதியில் மண்திட்டு காணப்படுகின்றது. குறித்த மண் திட்டு வருடம் தோறும் சரிந்து போக்குவரத்துக்கு பாதிப்பை ஏற்படுத்துகின்றது. அதனை அகற்றுவதற்கு திணைக்களங்கள் நடவடிக்கை எடுக்கவில்லை. பிரதேச மக்களின் தனிநபர் வருமானத்திலிருந்து நிதி சேகரிக்கப்பட்டு கனரக இயந்திரம் கொண்டு போக்குவரத்து மேற்கொள்ளக் கூடிய வகையில் மணல் கடல் பகுதிக்குள் தள்ளிவிடப் பட்டது.

தற்போது ஏற்பட்டுள்ள காற்றால் மீண்டும் மண் திட்டு அதிகரித்து சரிந்து வீழ்ந்து போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான நிலையில் பிரதேச சபையிடம் மீண்டும் பல்வேறு கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன. குறித்த மண்திட்டை அகற்றி பிரதேசத்தின் போக்குவரத்தை சீர்செய்வதற்கும், அதன் ஊடாக பிரதேச சபைக்கு வருமானத்தை ஈட்டுவதற்கும் பல்வேறு முயற்சிகளை நாம் மேற்கொண்டோம். அதற்கு மாவட்டச் செயலர் உள்ளிட்ட அதிகாரிகள் அனுமதி வழங்கியுள்ளபோதிலும், கனிய வளத் திணைக்களம் இழுத்தடிப்பு செய்கின்றது. எனினும் பிரதேசத்தின் தற்போதைய நிலை மற்றும் பிரதேச சபையின் வருமானத்தைக் கருத்தில் கொண்டு இந்த வாரமளவில் உள்ளூருக்குள்ளேயே மண்ணை விற்பனைசெய்ய உள்ளோம். கிடைக்கும் வருமானத்தை பிரதேசத்தின் அபிவிருத்திக்கு பயன்படுத்தவுள்ளோம் -என்றார். (ப-6)

## முகநூலில் பதிவிட்டவர்களை ஆணி அடித்துச் சித்திரவதை

*பூசாரி உள்ளிட்ட இருவர் கைது*

கொழும்பு, ஜூன் 29

முகநூலில் கருத்துப் பதிவிட்ட இருவர் கடத்திச் செல்லப்பட்டு, காட்டுக்குள் வைத்து சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டுள்ள கொடூரச் சம்பவம் கண்டியில் இடம்பெற்றிருந்த நிலையில், சித்திரவதையை மேற்கொண்டனர் என்று கருதப்படும் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட வாகனமும் மீட்கப்பட்டுள்ளது.

கண்டி பல்லேகல, பலகொல்ல பகுதியில் வசிக்கும் 30 வயதுடைய நபரொருவரே இந்தச் சம்பவத்தின் பிரதான சந்தேகநபராகக் கருதப்படுகின்றார் எனவும், அவரால் நடத்தப்படும் ஆன்மிக நிலையத்துக்கு எதிராக முகநூலில் தகவல் வெளியிட்டனர் எனக் கருதப்படும் இருவரே இவ்வாறு சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

இதேவேளை, இந்தச் சம்பவத்துடன் இன்னும் 10க்கும் மேற்பட்டவர்களுக்கு தொடர்பு இருக்கலாம் என்று சந்தேகம் வெளியிடப்பட்டு மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம-4)

## தன்சலில் பங்கேற்ற 9 பேருக்கு கொரோனா

கொழும்பு, ஜூன் 29

தன்சலில் பங்கேற்ற 9 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

பொசன் போயா தினத்தில், தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி அநுராதபுரம் கஹடகஸ்திகிலிய கட்டுகொலியாவ பகுதியில் தன்சல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதனையடுத்து அந்தப் பகுதியில் வசிக்கும் 36 குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என்று அந்தப் பிரதேசத்தின் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தெரிவித்துள்ளார். (ம-4)

## அசாத் சாலிக்கு எதிராக பி.ரி.ஏ.யின் கீழ் வழக்கு!

கொழும்பு, ஜூன் 29

மேல் மாகாண முன்னாள் ஆளுநர் அசாத் சாலிக்கு எதிராக, பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் (பி.ரி.ஏ) கீழ், வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது.

சட்டமா அதிபர் உயர்நீதிமன்றத்தில் நேற்று இந்த அறிவிப்பை விடுத்துள்ளார்.

கடந்த மார்ச் மாதம் 9ஆம் திகதியன்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போது, சர்ச்சைக்குரிய கருத்தைத் தெரிவித்திருந்தார் என்ற குற்றச்சாட்டின் கீழ், அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது.

தன்னை விடுதலைசெய்யுமாறு கோரி அசாத் சாலி தாக்கல்செய்த மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில், சட்டமா அதிபர் சார்பில் மன்றில் முன்னிலையான பிரதி சொலிஸிஸ்டர் ஜெனரல் திலீப பீரிஸ் இதனைத் தெரிவித்துள்ளார்.

குறித்த வழக்கு பிரியந்த ஜயவர்தன, யசந்த கோதாகொட மற்றும் ஏ.எச்.எம்.டீ நவாஸ் ஆகிய மூவரடங்கிய நீதிபதிகள் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதனையடுத்து குறித்த மனு மீதான விசாரணை எதிர்வரும் ஜூலை மாதம் 29ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



## நடராசா தவவரதராஜலிங்கம் (N.T.V.R)

சுழிபுரம் மத்தியைப் பிறப்பிடமாகவும் அவுஸ்திரேலியா சிட்னியை வதிவிடமாகவும் கொண்ட நடராசா தவவரதராஜலிங்கம் (N.T.V.R) அவர்கள் நேற்று (28.06.2021) திங்கட்கிழமை அவுஸ்திரேலியாவில் சிவபதமடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை நடராசா (ராசாப்பா)- நாகேஸ்வரி தம்பதியரின் சிரேஸ்ட புத்திரனும், காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் லீலாவதியின் பாசமிகு மருமகனும், ஜீவயோகியின் இணைபிரியா துணைவரும், கண்ணன், கோபி ஆகியோரின் ஆருயிர் தந்தையும், அபியின் மாமனாரும், ஆருஜாவின் தாத்தாவும், ஹெலனின் மாமனா ரும், தபேந்திரலிங்கம் (தபே) தவரூபியின் பாசமிகு சகோதரரும், முரளிதரன், தேவராணி ஆகியோரின் மைத்துனரும் ஆவார். இவர் பறாளை ஸ்ரீ சிவசுப்பிரமணிய ஆலய சங்காபிஷேக சபையின் ஆயுள்கால உறுப்பினரும், இற்றைவரை நிர்வாக உறுப்பினராகவும் பெரும் பணியாற்றிவருபவரும் சமூகத் தொண்டனுமாவார்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பறாளாய் முருகனை வேண்டி நிற்கின்றோம்.

**பறாளாய்**
**ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலய**
**சங்காபிஷேக சபை,**
**சுழிபுரம்.**

# மிகுந்த நன்றி

## அமைச்சர் திரு. நாமல் ராஜபக்ஷ

**முன்னாள் புலிகளின் உறுப்பினர் விடுதலைக்கு கடும் முயற்சி செய்து வெற்றி அடைந்ததற்கு நன்றி.**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, திரு. இ.சம்மந்தன், திரு. ஆ. சுமந்திரன் முன்னாள் ஜனாதிபதி திரு. மைத்திரிபால சிறிசேன முன்னாள் பிரதமர் திரு. ரணில் விக்கிரமசிங்கா இவர்கள் செயல் திறனற்ற சுய தேவைக்காக அரசியல் செய்யும் அரசியல்வாதிகள் என்பதை நிரூபித்து காட்டியுள்ளீர்.

பௌத்த இந்து ஒற்றுமை,
க.கணேசநாதன், ஸ்ரீ நாகவிகாரை, யாழ்ப்பாணம்.

# மரண அறிவித்தல்



## அகுஸ்ரின் அருளப்பு

**தோற்றம்** 24.06.1936 **மறைவு** 28.06.2021

குருநகரைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு. அகுஸ்ரின் அருளப்பு அவர்கள் நேற்று (28.06.2021) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி அகுஸ்ரின் செபஸ்ரியானா அவர்களின் அருமை மகனும் காலஞ்சென்ற கிறேஸ்சின் அன்புக் கணவரும், ராணி, ஜெயபாலன், குமார், லிடியன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், மலர், செல்வி, காலஞ்சென்ற கனகு, ரவி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**47, ஓடக்கரை வீதி, குருநகர்,**
**யாழ்ப்பாணம்.**
**077 087 0575**

**தகவல்:**
**மகன் - அ. ஜெயபாலன்**

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



**மண் மகிழ** 22.04.1954

**விண் தழுவ** 30.05.2021

கடந்த 30.05.2021 ஞாயிற்றுக்கிழமை அன்று ஈசனடி சேர்ந்த எங்கள் குடும்பத் தலைவி

## அமரர் சறோஜாதேவி சிவபாலன்

### (ஓய்வுபெற்ற ஆசிரியை)

யாழ். கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டிருந்த அமரர் சறோஜாதேவி சிவபாலன் அவர்கள் இறையருளால் எம் குடும்பத் தலைவியாக வாழ்ந்து எண்ணிலடங்கா கடமைகளால் எங்கள் இதயக் கமலங்களை மலர்த்தி கடந்த 30.05.2021 ஞாயிற்றுக்கிழமை அன்று ஈசனடி சேர்ந்தர்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி சிவப்பிரகாசம் திருநாவுக்கரசு துரைரத்தினம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற திரு.திருமதி குழந்தைவேலு சபாரட்ணம் மரகதம் தம்பதிகளின் அன்பு மருமகளும், திரு சபாரட்ணம் சிவபாலன் (ஓய்வு பெற்ற மக்கள் வங்கி முகாமையாளர்) அவர்களின் அன்பு மனைவியும், திருமதி சி.லக்ஷிதா (நிர்வாக உத்தியோகத்தர், கட்டடங்கள் திணைக்களம்), திருமதி தீ.ஹம்ஷிதா (சிங்கப்பூர்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், திரு ப.சிவஞானவேல் ( செயலாளர், வேலணைப் பிரதேசசபை), திரு. நி. தீபன் (பொறியியலாளர், சிங்கப்பூர்) அவர்களின் பாசமிகு மாமியாரும், திருமதி லங்காதேவி சிவராசா (ஓய்வுநிலை ஆசிரியை), திரு. திருநாவுக்கரசு சிவகுமாரு (நியூசிலாந்து) காலஞ் சென்ற தி.சுசிலாதேவி, திரு. திருநாவுக்கரசு ராஜ்குமார் (பிரான்ஸ்), திருமதி சுதர்சினி பரந்தாமன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், திருமதி தேவசேனா பாலகிருஸ்ணேஸ்வரன் (ஓய்வுநிலை ஆசிரியை), திருமதி சிவயோகி தபோதநாயகம் (ஓய்வுநிலை ஆசிரியை), திருமதி மாலதி நித்தியகீர்த்தி (அவுஸ்திரேலியா) திரு.சபாரட்ணம் உமாபாலன் (கனடா), திரு. பொன்னம்பலம் சிவராசா, காலஞ்சென்ற திருமதி சிவகுமாரு ஞானேஸ்வரி, திருமதி ராஜ்குமார் ஜெயரூபி, திரு. இலங்கையர்பரந்தாமன் ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், பிரணவி, நர்த்தவி, பிரகதி, தர்மிக், கஜலக்ஷன், அவர்களின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பிரிவுச் செய்தி அறிந்த நேரம் முதல் எம் அருகிருந்து எம்மை ஆறுதல்படுத்திய அன்பு உள்ளங்களுக்கும், தேவார திருவாசகங்களை ஓதிப் பிரார்த்தித்தோருக்கும், மலர் வளையங்கள், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம் மற்றும் பதாதைகள் மூலம் அனுதாபம் தெரிவித்து ஆறுதல் அளித்தவர்களுக்கும், இறுதிக் கிரியைகளுக்கான சகல ஒழுங்குகளையும் மேற் கொண்ட உற்றார், உறவினர்கள், அயலவர்கள், நண்பர்களுக்கும், தொலைபேசி, Tele-mail, சமூகவலைத்தளங்கள் ஊடாக துயர் பகிர்ந்த உறவினர்கள், நண்பர்கள் மற்றும் புலம் பெயர் உறவுகளுக்கும், இறுதிக்கிரியை, அத்தியேட்டிக் கிரியைகளையும் சிறப்புற நடாத்திய குருமார்களுக்கும், இறுதி நிகழ்வுகளில் கலந்து கொண்ட அனைத்து நல்லுள்ளங்களுக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவி புரிந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அத்தோடு அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் 27.06.2021 ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 29.06.2021 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை அன்னாரது இல்லத்திலும் நடைபெறும் என்பதனை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

"பயன்தூக்கார் செய்த உதவி நயன் தூக்கின் நன்மை கடலிற் பெரிது"

**தற்போது கொரோனா தொற்றினால் நிலவும் இக்கட்டான சூழ்நிலை காரணமாக அனைவரையும் வீட்டுக் கிருத்திய நிகழ்வுக்கு அழைக்க முடியாமைக்கு மிகவும் மனம் வருந்துகின்றோம்.**

**ஸ்ரேசன் வீதி, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.**

**குடும்பத்தினர்**
**திரு. ச.சிவபாலன் (கணவர்)**
**திரு.திருமதி லக் ஷிதா சிவஞானவேல் (மகள்,மருமகன்)**
**திரு.திருமதி ஹம்ஷிதா தீபன் (மகள்,மருமகன்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆபத்தாக மாறும் டெல்டா வைரஸ்

## மருத்துவர்கள் எச்சரிக்கை

**கொழும்பு, ஜூன் 29**
**முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்படாவிட்டால், இலங்கையில் டெல்டா வைரஸ் பிரதான வைரஸாக மாறி, ஆபத்தை ஏற்படுத்தும் என்று மருத்துவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

டெல்டா வைரஸ் மாறுபாடு குறித்து ஆராய்ச்சிசெய்யும் மருத்துவ நிபுணர்களே இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளனர். மக்கள் சரியான சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்றாவிட்டால் அடுத்த 8 வாரங்கள் இலங்கையில் நிலைமை தீவிரமாக இருக்கும் என்றும் மருத்துவர்கள் எச்சரித்துள்ளனர்.

அதேநேரம், இதுவரை திரிபடைந்த கொவிட் வைரஸ்களில் டெல்டாவே கூடுதல் ஆபத்தானது என்று நேற்று முன்தினம் உலக சுகாதார நிறுவனம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

தொற்றும் தன்மை, வீரியம், தன்னைத் தகவமைத்துக்கொள்ளும் விதம் ஆகியவற்றை அடிப்படையாக வைத்து இந்த எச்சரிக்கையை உலக சுகாதார நிறுவனம் வெளியிட்டுள்ளது. பிரிட்டன், பிரான்ஸ், தென்னாபிரிக்கா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளில் டெல்டா தீவிரமாகப் பரவக்கூடிய ஏதுநிலை உள்ளது என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

# டெல்டா வைரஸ் தொற்றுடன் மற்றொருவரும் அடையாளம்

கொழும்பு, ஜூன் 29
டெல்டா வைரஸ் தொற்றுக்குள்ளான ஒருவர் கொழும்பு கஹதுடுவ ஜயலியகமப் பகுதியில் அடையாளம் காணப்பட்டுள்ளார் என்று கஹதுடுவ சுகாதார மருத்துவ அதிகாரி தனுக்க பத்மராஜ தெரிவித்துள்ளார்.

47 வயதான குறித்த நபர், கொழும்பு கொம்பனித்தெரு பகுதியிலுள்ள பிரதான நிர்மாணத்துறை அலுவலகமொன்றில் பணியாற்றியுள்ளார். அடையாளம் காணப்பட்ட நபர், பொலநறுவை கொவிட் சிகிச்சை நிலையத்தில் சேர்க்கப்பட்டுள்ளார்.

குறித்த நபரின் குடும்பம் உட்பட மேலும் 50 குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

குறித்த நபர் பணியாற்றிய நிறுவனத்திலிருந்து, இந்த வைரஸ் பரவியிருக்கக்கூடும் என்று சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை டெல்டா வைரஸ் தொற்றாளர்கள் தெமட்டகொட மற்றும் மாதிவெல ஆகிய பகுதிகளில் அண்மையில் அடையாளம் காணப்பட்டனர். (ம-4)




# இலங்கையில் பரவியுள்ள கொரோனா வைரஸ்கள்

## மரபணு ஆராய்ச்சி ஆரம்பம்

கொழும்பு, ஜூன் 29
இலங்கையில் பரவியுள்ள கொரோனா வைரஸ்களின் வகைகள் தொடர்பில் ஆய்வு செய்வதற்கான மரபணு பகுப்பாய்வு ஆராய்ச்சி நடவடிக்கைகள் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் சிறி ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை, நோய் எதிர்ப்பு மற்றும் உயிரியல் பிரிவின் பணிப்பாளர் மருத்துவர் சந்திம ஜீவந்தர தெரிவிக்கையில்,

தொற்றுநோயியல் பிரிவின் ஊடாக வழங்கப்படும் தகவல்களின் அடிப்படையில் இந்த ஆராய்ச்சி மேற்கொள்ளப்படுகின்றது. குறித்த ஆராய்ச்சியின் முடிவுகள் 7 நாள்களுக்குள் வெளியிடப்படும். தற்போது இந்தியாவில் வேகமாகப் பரவிவரும் டெல்டா வைரஸ் தொற்றாளர்கள் சிலர் இலங்கையில் இனங்காணப்பட்டுள்ளனர்.

அவ்வாறு இனங்காணப்பட்ட பகுதிகளில் டெல்டா வைரஸ் வேகமாக பரவி வருகின்றது. ஏனைய வைரஸ்களின் மாதிரிகளும் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்படும்- என்றார். (ம-4)

# தனிமைப்படுத்தல் விதிகளை மீறிய 428 பேர் கைது!



கொழும்பு, ஜூன் 29
தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறினர் என்ற குற்றச்சாட்டில் நேற்றும் (நேற்றுமுன்தினம்) 428 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

கண்டி, மாத்தளை மற்றும் கம்பளை ஆகிய பகுதிகளிலேயே அதிகளவானோர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கண்டியில் 93 பேரும், மாத்தளையில் 77 பேரும், கம்பளையில் 58 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அதேவேளை தனிமைப்படுத்தல் விதிகளை மீறினர் என்ற குற்றச்சாட்டில் இதுவரை 44 ஆயிரத்து 644 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4)

# கொரோனாத் தொற்றாளர்களை மருத்துவமனையில் குதறிய நாய்

கொழும்பு, ஜூன் 29
கொரோனாத் தொற்றாளர்களை நாய் ஒன்று விரட்டி விரட்டிக் கடித்த சம்பவம் மொறவக்க கொஸ்நில்கொட அரச மருத்துவமனையில் நடந்துள்ளது. இந்தச் சம்பவத்தில் மூன்று பெண்கள் காயமடைந்துள்ளனர்.



மருத்துவமனையின் விடுதியில் வெளிநாட்டிலிருந்து வருகை தந்த 18 பெண்கள் அடங்கலாக 38 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். இவர்களில் சிலர் வீடு திரும்பத் தயாராகி இருந்த சந்தர்ப்பத்திலேயே இந்தச் சம்பவம் நடந்துள்ளது.

இதனையடுத்து மருத்துவமனைக்கு வெளியில் வைத்து, அங்கிருந்த சிலர் நாயை அடித்து கொன்றுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (4)




# தடுப்பூசிகளின் விவரங்களை பகிரங்கப்படுத்த முடியாது

## சினோவாக் நிறுவனம் நிபந்தனை

கொழும்பு, ஜூன் 29
இலங்கை கொரோனா வைரஸ் தடுப்பூசிகளைக் கொள்வனவு செய்யும் பட்சத்தில், அதன் விவரங்களை பகிரங்கப்படுத்தக்கூடாது என்று சினோவாக் நிறுவனம் நிபந்தனை விதித்துள்ளது.

தடுப்பூசிகளின் விலை விபரங்கள் பொதுமக்களுக்கு தெரியப்படுத்தப்பட்டாலோ அல்லது அது குறித்து பொதுவெளியில் பேசப்பட்டாலோ இலங்கை அரசுடனான உடன்படிக்கை நிறுத்தப்படும் அல்லது சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்ற நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் சீன நிறுவனத்துடன் உடன்படிக்கை செய்துள்ள தனியார் நிறுவனத்தின் தலைவர் வி. நடராஜா இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமனவுக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

சீனாவிடமிருந்து தடுப்பூசிகளைக் கொள்வனவுசெய்வதற்காக செலுத்தப்படும் கட்டணம் தொடர்பில் சர்ச்சை நிலவுகின்ற சூழலிலேயே இந்தத் தகவல் வெளியாகியுள்ளது. (4)

# கூரிய ஆயுதத்தால் தாக்கி நபரொருவர் படுகொலை

கொழும்பு, ஜூன் 29
பொரளைப் பகுதியில் கூரிய ஆயுதமொன்றால் தாக்கி, நபரொருவர் படுகொலைசெய்யப்பட்டுள்ளார் என்று பொரளை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்தில் காயமடைந்த நபரை, மருத்துவமனைக்குக் கொண்டு சென்ற போதிலும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். கோதமிபுர தேசிய குடியிருப்புத் தொகுதியில் வசிக்கும் 47 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொரளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### டெல்டா அவதானிக்கப்பட்ட இடங்களில்

# துரிதமாகத் தடுப்பூசிகள் வழங்குவதற்குத் திட்டம்

**கொழும்பு, ஜூன் 29**

**'டெல்டா கொரோனா வைரஸ் மிகுந்த வீரியத்துடன் பரவும் தன்மை கொண்டது. கொரோனாத் தடுப்பூசி போட்டுக் கொள்ளாதவர்களிடம் இந்த வைரஸ் வேகமாகப் பரவ வாய்ப்புள்ளது என உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது. இந்நிலையில், இலங்கையில் டெல்டா வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்ட பிரதேசங்களில் கொரோனாத் தடுப்பூசிகளைப் போடும் நடவடிக்கை துரிதப்படுத்தப்பட்டுள்ளது இவ்வாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அசேல குணவர்தன தெரிவித்தார்.**



அவர் மேலும் தெரிவிக்கையில்;
'இந்தியாவில் உருமாறிய வைரஸே டெல்டா கொரோனா வைரஸ். இந்த வைரஸ் தொற்றுடன் இலங்கையிலும் சிலர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.
ஆபத்துமிக்க இந்த வைரஸைக் கட்டுப்படுத்த மக்களின் ஒத்துழைப்பு மிகவும் அவசியம். கொரோனாத் தடுப்பு சுகாதார விதிமுறைகளை மக்கள் உரியவாறு கடைப்பிடித்தால் டெல்டா வைரஸைக் கட்டுப்படுத்த முடியும்.
கொரோனாத் தடுப்பூசி போட்டுக் கொள்ளாதவர்களிடம் இந்த வைரஸ் வேகமாகப் பரவக்கூடும். எனவே, தடுப்பூசிகளை இதுவரை போடாதவர்கள் கட்டாயம் சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றி நடக்க வேண்டும்' - என்றார்.

(ம-22)



## கர்ப்பிணிகள் 100 பேருக்கு கொரோனா

கொழும்பு.ஜூன் 29
நாடளாவிய ரீதியில் சுமார் 100 கர்ப்பிணிகள் மற்றும் 50 பாலூட்டும் தாய்மார்களுக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
இவர்கள் தற்போது மருத்துவமனைகளில் சிகிச்சைபெற்று வருகின்றனர் என்று குடும்ப சுகாதார சேவைகள் பணியகத்தின் இயக்குநர் மருத்துவர் சித்ர மாலி டி சில்வா தெரிவித்துள்ளார்.
எனவே கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு காய்ச்சல் ஏற்பட்டால் உடனடியாக சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தியுள்ளார். (ம-4)

## மேலும் சில பிரிவுகள் நேற்றுமுதல் தனிமை!

கொழும்பு, ஜூன் 29
இரண்டு மாவட்டங்களில், சில கிராம சேவகர் பிரிவுகள் நேற்றுக் காலை முதல் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என்று கொவிட்-19 பரவலைத் தடுக்கும் தேசிய செயற்பாட்டு மையத்தின் பிரதானியும், இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.
அதற்கமைவாக இரத்தினபுரி மாவட்டத்தில் நொரகல்ல கிராம சேவகர் பிரிவின் நொரகல்ல மேல் பிரிவும், யக்தெஹிவத்த கிராம சேவகர் பிரிவின் பின்கந்த 1 மற்றும் பின்கந்த 2 ஆகிய பகுதிகளும், பாதகட கிராம சேவகர் பிரிவின் பின்கந்த 3 பகுதியும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.
இதேவேளை மொனராகலை மாவட்டத்தில் நக்கலவத்த மற்றும் மில்லகெலே வத்த கிராமங்கள் ஆகியவையும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.
(ம-4)

## வன விலங்குகளுக்கும் அன்டிஜென் பரிசோதனை

கொழும்பு, ஜூன் 29
வன விலங்குகளுக்கு அசாதாரண அறிகுறிகள் தென்பட்டால், கொரோனாத் தொற்று உள்ளதா என்பதைக் கண்டறிய, அன்டிஜென் பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு வனவிலங்கு அமைச்சு திட்டமிட்டுள்ளது.
இதற்கான அன்டிஜென் சோதனைக் கருவிகள் வனவிலங்கு பாதுகாப்புத் துறையிடம் ஒப்படைக்கப்படும் என்று அமைச்சர் ரத்நாயக்க தெரிவித்துள்ளார். தெஹிவளை மிருகக்காட்சி சாலையில் இரண்டு சிங்கங்கள் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளன என்று வெளியாகிய தகவலைத் தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4)

## நாடு திரும்புவோருக்கு புதிய விதிகளுடன் சுற்றறிக்கை

கொழும்பு, ஜூன் 29
வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு மீளத் திரும்புவோருக்கு, புதிய தனிமைப்படுத்தல் விதி முறைகள் அடங்கிய சுற்றறிக்கை சுகாதார அமைச்சால் வெளியிடப்பட்டுள்ளது.
எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி முதல் 31ஆம் திகதி வரை செல்லுபடியாகும் வகையில் இந்த விதி முறைகள் பின்பற்றப்படும் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.
அதற்கமைவாக வெளிநாடுகளில் இருந்து வருகைதரும் இலங்கையர்கள், வர்த்தக மாலுமிகள், கடற்படை பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மற்றும் இரட்டைப் பிரஜாவுரிமை உடையோர், சுற்றுலாப் பயணிகள் ஆகியோருக்கு இந்தச் சுற்றறிக்கை பொருந்தும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
அதற்கமைவாக நாட்டுக்கு வருகைதரும் இவர்கள் பி.சி.ஆர். பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டு, கொரோனா இடைத்தங்கல் நிலையங்கள் அல்லது ஹொட்டலுக்கு அனுப்பி வைக்கப்படுவர்.
11 தொடக்கம் 14 நாள்களுக்குள் முன்னெடுக்கப்படும் பி.சி.ஆர். பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்படவில்லையெனில், 14ஆவது நாள் நிறைவில் அவர்களை வீடுகளுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படும்.
பரிசோதனைகளில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டால் மருத்துவமனைகளில் சேர்க்கப்படுவர்.
முழுமையாக தடுப்பூசி ஏற்றிக் கொண்ட இலங்கையர்களும், இரட்டைப் பிரஜாவுரிமை கொண்டவர்களும் பி.சி.ஆர்.பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்படுவர்.
தொற்று உறுதிசெய்யப்படாதவிடத்து, பிரதேசத்துக்கு பொறுப்பான சுகாதார மருத்துவ அதிகாரியின் கண்காணிப்பின் கீழ் அவர்களை வீடுகளில் தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். 14 நாள்கள் நிறைவில் மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர். பரிசோதனையில் தொற்று உறுதிசெய்யப்படவில்லை என்றால் அவர்கள் வீட்டுத் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்படுவர்.
இதேவேளை அனுமதி பெற்று இராஜ தந்திர மட்டத்தில் நாட்டுக்கு வருகை தரும் வெளிநாட்டவர்கள் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் பிரதி நிதிகள், நாட்டுக்கு வருகைதரும் போது பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர், சுகாதார மருத்துவ அதிகாரிகளால் அனுமதிக்கப்படும் தனிமைப் படுத்தல் ஹொட்டல்களுக்கு அனுப்பி வைக்கப்படுவர்.
அவர்களுக்கு தொற்று உறுதிப்படுத்தப்படாதவிடத்து, 11 முதல் 14 நாள்களுக்குள் இரண்டாவது பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொண்டு, அதிலும் தொற்று உறுதிப்படுத்தப்படாதவிடத்து 14ஆம் நாள் நிறைவில் தனிமைப்படுத்தல் நடவடிக்கையிலிருந்து விடுவிக்கப்படுவர்.
இதற்கு மேலதிகமாக நாட்டுக்கு வருகைதரும் அனைத்து வெளிநாட்டவர்களும், அவர்கள் ஏற்றிக் கொண்ட தடுப்பூசி தொடர்பில் ஆராய்ந்து, முதலாவது பி.சி.ஆர். பரிசோதனையின் பின்னர் தனிமைப்படுத்தல் ஹொட்டல்களுக்கு அனுப்பி வைக்கப்படுவர் என்று அறிக்கையில் குறிப்பி டப்பட்டுள்ளது. (ம-4)

# இதுவரை பயன்படுத்தாத 3 வகைத் தடுப்பூசிகள்!

### இரு வாரங்களுக்குள் இலங்கைக்கு

கொழும்பு, ஜூன் 29
இலங்கையில் இதுவரையிலும் பயன்படுத்தப்படாத 3 வகையான கொரோனாத் தடுப்பூசிகள் எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் கிடைக்கும் என்று இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
மூன்று வகையான தடுப்பூசிகளுக்கும் உலக சுகாதார அமைப்பு அனுமதி வங்கியுள்ளது. அதற்கமைவாக அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட பைஸர் மற்றும் மொடர்னா தடுப்பூசிகள், சீனாவில் தயாரிக்கப்பட்ட சினோவாக் தடுப்பூசி ஆகியவற்றை இலங்கை பெற்றுக் கொள்ளவுள்ளது.
**எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் நாடு**



முழுவதும் 60 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் குறைந்தபட்சம் ஒரு டோஸ் தடுப்பூசியையாவது வழங்குவதே எமது குறிக்கோள். தடுப்பூசி 100 வீதம் பாதுகாப்பானது என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. தடுப்பூசி வகையைப் பொறுத்து பாதுகாப்பு மாறுபடும் - என்றார். (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் விரைவில் உணவுக்குத் தட்டுப்பாடு



## ஐக்கிய மக்கள் சக்தி எச்சரிக்கை

**கொழும்பு, ஜூன் 29**

**உரிய மாற்று ஏற்பாடுகளின்றி இரசாயன உரப் பயன்பாட்டுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதால், நாட்டில் உணவுக்குத் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் உள்ளது என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி சுட்டிக்காட்டியுள்ளது.**

இது தொடர்பில் கட்சியின் தேசிய அமைப்பாளரான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவிக்கையில்,

இரசாயன உரம் மற்றும் மருந்துகளுக்கே எமது நாட்டிலுள்ள விளைச்சல் நிலம் பல தசாப்தங்களாக பழக்கப்பட்டுள்ளது. இவற்றைப் பயன்படுத்துவதால் சிறந்த விளைச்சல் கிடைக்கும் என்ற நிலை காணப்படுகின்றது.

குறிப்பாக தேயிலை உற்பத்திக்கு ஆரம்பம் முதலே இரசாயன உரமும், மருந்தும் தான் பயன்படுத்தப்பட்டுள்ளன. எனவே அந்தத் துறையில் உற்பத்தியை அதிகரிக்க வேண்டுமானால், இரசாயன உரம் அவசியம் என்று உற்பத்தியாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். அவ்வாறு இல்லாவிட்டால் அடுத்தாண்டில் தேயிலை உற்பத்தி 50 வீதத்தால் குறைவடையும் எனவும் குறிப்பிடுகின்றனர்.

சேதனப்பசளை மூலம் விவசாய நடவடிக்கையை மேற்கொள்வது தவறென நாம் குறிப்பிடவில்லை. ஆனால் இதற்காக கால அட்டவணையொன்று வகுக்கப்பட்டிருக்க வேண்டும். ஐந்து அல்லது பத்தாண்டுத் திட்டம் வகுக்கப்பட்டு மெல்லவே நகர வேண்டும். அப்போதுதான் மண்ணும் பழக்கப்படும். விவசாயிகளுக்கும் போதிய அனுபவத்தைப் பெறக்கூடியதாக இருக்கும்.

குறைந்த பட்சம் 5 ஆண்டுகளை எடுத்துக்கொண்டு வருடாந்தம் 20 வீதமென பயணித்தால் உரிய இலக்கை அடையலாம்.

இரசாயன உர இறக்குமதிக்கான வெளிநாட்டு நிறுவனங்களுக்கு அதிக பணம் செலுத்தப்படுவதைத் தடுப்பதும் உரத் தடைக்கான காரணங்களுள் ஒன்றாகும். ஆனால் இலங்கையில் போதுமானளவு சேதனப்பசளை உற்பத்தி செய்யப்படுகின்றதா? இல்லை. சீனாவில் இருந்து இறக்குமதி செய்வதற்கே திட்டமிட்டுள்ளனர். இது தவறான செயலாகும்.

போதுமானளவு சேதனப்பசளையை உற்பத்திசெய்வதற்கான பொறிமுறை இல்லாமல் இரசாயன உரப் பயன்பாட்டையும் தடை செய்வதன்மூலம் உற்பத்தி வீழ்ச்சியடையும்.

நெல் உற்பத்தியும் பாதிக்கப்படும். இதனால் நாட்டில் உணவுக்குத் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் உள்ளது- என்றார். (4,44)

# அமெரிக்க ராணுவத்தினர் இலங்கைக்குள் ஊடுருவல்?

கொழும்பு, ஜூன் 29

அமெரிக்காவின் முன்னாள் இராணுவ அதிகாரிகள் சிலர் இலங்கைக்கு வருகைதந்து மீளத் திரும்பியுள்ளனர் என்று தென்னிலங்கை ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

அமெரிக்காவின் இராணுவ முன்னாள் அதிகாரி ஒருவர் கடந்த வாரம் நாட்டில் இருந்து வெளியேறியுள்ளார் என்றும் அந்த ஊடகம் சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பில் குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் நடத்திய விசாரணையில், அமெரிக்க இராணுவ முன்னாள் அதிகாரி ஒருவர் நாட்டில் இருந்து வெளியேறியுள்ளார் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, பாதுகாப்பு அமைச்சின் அனுமதி இன்றி சுற்றுலா விசா ஊடாக மேலும் 4 அமெரிக்க முன்னாள் இராணுவ அதிகாரிகள் இலங்கைக்குள் பிரவேசித்துள்ளனர். அது தொடர்பில் தற்போது விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் குறித்த ஊடகம் தெரிவித்துள்ளது.

எனினும் இது தொடர்பில் அரசோ, பாதுகாப்பு அமைச்சோ எதுவிதமான தகவல்களையும் வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (4)



# ஐக்கிய அரபு அமீரகம் 14 நாடுகளுக்குத் தடை!

கொழும்பு, ஜூன் 29

கொரோனாத் தொற்றுக் காரணமாக இந்தியா, பாகிஸ்தான் மற்றும் இலங்கை உட்பட 14 நாடுகளின் விமான சேவைகளுக்கு ஐக்கிய அரபு அமீரகம் தடை விதித்துள்ளது.

கடந்த 19ஆம் திகதியிலிருந்து 27ஆம் திகதி வரை இந்தியா, இலங்கை, பாகிஸ்தான் உட்பட 14 நாடுகளில் இருந்து வருபவர்களுக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தன. எனினும் மீண்டும் தடை நீட்டிக்கப்பட்டுள்ளது என்று ஐக்கிய அரபு அமீரகத்தின் தேசிய அவசர நெருக்கடி மற்றும் பேரழிவுகள் அவசர நிலை மேலாண்மை ஆணைக்குழு அறிவித்துள்ளது.

அதற்கமைவாக பாகிஸ்தான், இலங்கை, இந்தியா, லைபீரியா, நமிபியா, சியாரா லியோன், காங்கோ, உகாண்டா ஜாம்பியா, வியட்நாம், வங்காளதேசம், நேபாளம், நைஜீரியா, தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளின் விமான சேவைகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. எனினும், சரக்கு விமானம், தொழில், வாடகை விமானம் ஆகியவற்றுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (4)



# 4 கைதிகள் தப்பியோட்டம்

கொழும்பு, ஜூன் 29

குருநாகல் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட 4 விளக்கமறியல் கைதிகள் தப்பிச்சென்றுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

குறித்த கைதிகளில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். ஏனைய மூன்று பேரையும் தேடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (4)

# சிறைச்சாலைச் சொத்துக்களை சேதப்படுத்தினால் மன்னிக்கோம்

கொழும்பு, ஜூன் 29



சிறைச்சாலைகளின் சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்கும் கைதிகளுக்கு இனிமேல் மன்னிப்பு வழங்கப்படாது என்று சிறைச்சாலை ஊடகப் பேச்சாளரும், சிறைச்சாலை ஆணையாளருமான சந்தன ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

சிறைச்சாலைகளின் கூரைகளின் மீதேறி ஆர்ப்பாட்டம் செய்வதன் மூலம், சிறைச்சாலைகளுக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

எனவே இவ்வாறு சேதம் விளைவிக்கும் எந்தவொரு கைதிக்கும் எதிர்காலத்தில் எந்தவிதமான மன்னிப்புக்கோரவும் நாங்கள் பரிந்துரைக்கப் போவதில்லை. சிறைச்சாலைகளின் சொத்துக்களைச் சேதப்படுத்தும் கைதிகள் தொடர்பில் சிறைச்சாலைத் திணைக்களம் கடுமையான தீர்மானங்களை எடுத்துள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (4)

# பஸ்கள், ரயில்களின் சேவைகள் அதிகரிப்பு

கொழும்பு, ஜூன் 29

மாகாணங்களுக்குள் சேவையில் ஈடுபடும் பஸ்கள் மற்றும் ரயில்களின் சேவைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

அதற்கமைவாக மேல் மாகாணத்தில் 70 ரயில் சேவைகளை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.



அதற்கமைவாக அம்பேபுஸ்ஸ, மீரிகம, வேயங்கொட ஆகிய இடங்களில் இருந்தும், கம்பஹாவில் இருந்து கொழும்பு கோட்டைக்கும் 11 ரயில் சேவைகளும், கரையோர ரயில் பாதையில் அளுத்கம, களுத்துறை தெற்கு, வாத்துவ, பாணந்துறை, மொரட்டுவ மற்றும் கல்கிஸ்சை ஆகிய இடங்களிலிருந்து 12 ரயில் சேவைகளும், அவிசாவளைக்கும் பாதுக்கைக்கும் இடையில் 5 ரயில் சேவைகளும், புத்தளம் ரயில் பாதையில் கொச்சிக்கடை மற்றும் நீர்கொழும்புக்கும் இடையில் 8 ரயில் சேவைகளும் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் தனிநபர் இடைவெளியை பேணும் வகையில் பஸ்களின் சேவைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன. அதேவேளை, மாகாணங்களுக்கு இடையிலான பஸ்கள் மற்றும் ரயில்கள் சேவைகளுக்கு இதுவரை அனுமதி வழங்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மைத்திரி, எஸ்.பிக்கு அமைச்சுப் பதவிகள்!

## முக்கிய திணைக்களங்கள் பஸில் வசம்

**கொழும்பு, ஜூன் 29**

**சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்க ஆகியோருக்கு அமைச்சரவை அந்தஸ்த்துள்ள அமைச்சுப் பதவிகள் வழுங்கப்படவுள்ளன என்று அரசியல் வட்டாரங்களில் இருந்து அறிய முடிகின்றது.**



ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசின் அமைச்சரவை எதிர்வரும் ஜூலை மாதம் நடுப்பகுதிக்குள் மறுசீரமைக்கப்படவுள்ளது.

அதற்மைவாக நாடாளுமன்றுக்கு வருகைதரவுள்ள சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்சவுக்கு பொருளாதார அபிவிருத்தி அமைச்சு பதவி வழங்கப்படவுள்ளது.

நிதி அமைச்சராக பிதமர் மஹிந்த தொடர்வார். எனினும் அதன் இராஜாங்க அமைச்சு பதவி பஸிலுக்கு வழங்கப்படவுள்ளது. அதே போன்று நிதி அமைச்சின் கீழுள்ள கொழும்பு துறைமுக நகரம் மற்றும் முதலீட்டுச்சபை உட்பட முக்கிய சில திணைக்களங்கள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் கொண்டு வரப்படவுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த அமைச்சரவை மறுசீரமைப்பின் போது மைத்திரிபால சிறிசேனவுக்கும், அமைச்சரவை அந்தஸ்த்துள்ள அமைச்சுப் பதவி வழங்கப்படவுள்ளது. சுற்றாடற்றுறை அமைச்சுப் பதவியை மைத்திரி கோரியுள்ளார் என்று தகவல்கள் கசிந்துள்ளன. (4,44)

# மைத்திரிபாலவுக்கு அமைச்சுப் பதவியா?

## மறுக்கிறது அவரது ஊடகப்பிரிவு

கொழும்பு, ஜூன் 29

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அமைச்சரவை அந்தஸ்த்துள்ள அமைச்சராக பதவியேற்கவுள்ளார் என்று வெளியாகிய தகவல்களை அவரின் ஊடகப்பிரிவு நிராகரித்துள்ளது.

தனக்கு அமைச்சுப் பதவியொன்றை வழங்குமாறோ அல்லது இதர பதவிகளை வழங்குமாறோ முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அரசிடம் எந்தவொரு கோரிக்கையையும் முன்வைக்கவில்லை என்று அவரின் பிரத்தியேக செயலாளர் தெரிவித்துள்ளார்.

அவ்வாறான பதவிகளைப் பெறும் எதிர்ப்பார்ப்பு முன்னாள் ஜனாதிபதிக்கு இல்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை அமைச்சரவை மறுசீரமைப்பின்போது மைத்திரிபால சிறிசேனவுக்கும் அமைச்சரவை அந்தஸ்த்துள்ள அமைச்சு பதவியொன்று வழங்கப்படவுள்ளது. சுற்றாடல்துறை அமைச்சு பதவியை அவர் கோரியுள்ளார் என்று சிங்கள நாளிதழொன்று செய்தி வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (4,44)

## 9 பில்லியன் ரூபா இழப்பு

# தனியார் பஸ்களின் சேவைகள் நிறுத்தம்?

கொழும்பு,ஜூன் 29

தனியார் பஸ் உரிமையாளர்களுக்கு 9 பில்லியன் ரூபா வரை இழப்பு ஏற்பட்டுள்ளதால், விரைவில் தனியார் பஸ் சேவைகளை நிறுத்த வேண்டிய நிலையேற்படலாம் என்று தனியார் பஸ் உரிமையாளர் சங்கத் தலைவர் கெமுனு விஜயரட்ண தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்

கொரோனாத் தொற்றால் எமது தொழிற்றுறை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. கடந்த ஒன்றரை வருடத்துக்குள் 9 பில்லியன் ரூபா இழப்பைச் சந்தித்துள்ளோம். தனியார் பஸ்களின் சாரதிகளாக , உதவியாளர்களாகப் பணிபுரிந்த பலர் புதிய தொழில்களுக்குச் சென்றுள்ளனர். அவர்கள் பணிக்கு திரும்பி வருவதற்கு தயக்கம் காட்டுகின்றனர்.

அத்துடன் தனியார் பஸ் சேவையைச் சேர்ந்தவர்களுக்கு தடுப்பூசியும் ஏற்றப்படவில்லை. அதனால் அவர்கள் மீண்டும் பணிக்கு வருவதற்கு அச்சப்படுகின்றனர்.

சராதிகளும், உதவியாளர்களும் பயணிகளுடன் நேரடியாக தொடர்பிலிருப்பவர்கள். அதனால் அவர்களுக்கே ஆபத்து. இத்தகைய காரணங்களால் சேவைகளை நிறுத்த வேண்டிய நிலைமை ஏற்படலாம்-என்றார். (4)

# கடமைக்கு இடையூறு: சந்தேகநபருக்கு மறியல்

கொழும்பு, ஜூன் 29

பொதுச் சுகாதாரப் பரிசோதகரின் கடமைக்கு இடையூறு விளைவித்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட நபருக்கு, விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மஹியங்கனையில் குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்ட நபர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு, எதிர்வரும் 9ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பொதுச் சுகாதாரப் பரிசோதகர்மீது எச்சில் துப்பிய குற்றச்சாட்டில், அட்டுளுகம பகுதியில் கைது செய்யப்பட்ட நபர் ஒருவருக்கு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4)



# அரச நிறுவனங்களின் ஊழியர்களுக்கு சம்பளம் அதிகரிப்பில்லை!

கொழும்பு, ஜூன் 29

நஷ்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களில் பணியாற்றும், ஊழியர்களுக்கு, சம்பள அதிகரிப்பை மேற்கொள்ளக்கூடாது என்று நிதி அமைச்சு அரசுக்கு ஆலோசனை வழங்கியுள்ளது.

மின்சார சபையின் கடன் ஆயிரம் பில்லியனைத் தாண்டியுள்ளது. நஷ்டத்தில் இயங்கிவரும் இந்த நிறுவனத்தை இலாபமடையச் செய்ய எந்தவிதமானத் திட்டங்களும் மேற்கொள்ளப்படவில்லை என்று நிதி அமைச்சின் சிரேஷ்ட உறுப்பினர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே நஷ்டத்தில் இயங்கிவரும் மின்சார சபை மற்றும் நீர் வழங்கல் அதிகார சபை ஆகியவை தொடர்பில் நிதி அமைச்சு அரசுக்கு அறிவித்துள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (4)

# இந்தியாவின் கோரிக்கையை முற்றாக நிராகரித்தது இலங்கை

கொழும்பு, ஜூன் 29

அமெரிக்க - இந்திய விமானப்படைகள் இணைந்து மேற்கொள்ளவுள்ள வான்படை பயிற்சி ஒன்றுக்காக இலங்கையின் வான் பரப்பை பயன்படுத்த அனுமதிக்குமாறு, இந்தியா விடுத்த வேண்டுகோளை இலங்கை திட்டவட்டமாக நிராகரித்திருக்கிறது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்திய விமானப்படை தளபதியினூடாக விடுக்கப்பட்ட இந்த வேண்டுகோளை பரிசீலித்த இலங்கை விமானப்படை அதற்கு அனுமதியை வழங்கமுடியாது என்று பதிலளித்திருக்கிறது என அறியமுடிந்தது.

இலங்கையின் அம்பாந்தோட்டை பகுதியில் அபிவிருத்தி திட்டம் என்ற போர்வையில் சீன இராணுவம் ஊடுருவியுள்ளது எனவும் சீன இராணுவத்தினரின் சீருடையை ஒத்த சீருடை அணிந்த பலர் அங்கு பணியாற்றுகின்றனர் என்றும் செய்திகள் வெளியாகியிருந்தன. இந்த பின்னணியில் இலங்கை வான்பரப்பில் அமெரிக்க - இந்திய வான்படைகள் பயிற்சியில் ஈடுபட்டு மறைமு



கமாக கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடலாம் என்று கருதியே இலங்கை, இந்தியாவின் மேற்படி கோரிக்கையை நிராகரித்திருக்கின்றது என்று உள்ளக தகவல்கள் சொல்கின்றன. அமெரிக்க - இந்திய வான்படைகளின் கூட்டுப் பயிற்சியை நடத்த இலங்கை வான்பரப்பை பயன்படுத்த அனுமதிகோரி இராஜதந்திர மட்டத்திலும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன என்றும், எனினும் அவை சாத்தியப்படவில்லை என்றும் அறியமுடிந்தது. (த-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கம்மன்பிலவை நீக்கி பஸிலுக்கு நியமனமா?

## சாத்தியம் இல்லை என்கிறார் இராஜாங்க அமைச்சர்



**கொழும்பு, ஜூன் 29**

**அமைச்சர் உதய கம்மன்பிலவை பதவியிலிருந்து நீக்கி, அவரது இடத்துக்கு பஸில் ராஜபக்சவை நியமிக்கும் எண்ணம் எதுவுமில்லை என்று இராஜாங்க அமைச்சர் ஜனக வக்கும்புர தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்; அமைச்சரவையில் பஸில் ராஜபக்ச இணைந்தால் அரசின் பொருளாதார முகாமைத்துவம் வலுப்பெறும். ஆனால் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வுகாண முடியாது. அவர் கடந்த காலங்களில் தனது அமைச்சின் ஊடாக பலபணிகளை ஆற்றியுள்ளார். அவரால் ஜனாதிபதிக்கு உதவமுடியும். அரசின் முடிவுகள் நீண்ட கலந்துரையாடலின் பின்னர் கூட்டாக எடுக்கப்படுகின்றன. அரசுக்குள் உள்மோதல் எதுவும் இல்லை. பல தரப்பினர் தங்கள் கருத்துக்களை முன்வைப்பதற்கு அனுமதிப்பதன் மூலம் ஜனநாயகம் பின்பற்றப்படுகின்றது - என்றார். (ம-4)

# கம்மன்பில - சாகர மோதல் ஆரம்பம்

கொழும்பு, ஜூன் 29

எரிபொருள்களின் விலை அதிகரிப்பால் வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில மற்றும் சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் சாகர காரியவசத்துக்கும் இடையில் மோதல் ஏற்பட்டுள்ளது.

கடந்த வாரம் இருவரும் ஒருவரை ஒருவர் சந்தித்த போதும், பேசிக்கொள்ளவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் தலைமையில் அண்மையில் நடைபெற்ற ஆளுங்கட்சிக் கூட்டத்தில் சாகரவும், கம்மன்பிலவும் சந்தித்துக்கொண்டனர். இதன்போது கூட்டம் நடைபெற்ற அறையின் கதவருகில், நின்று கொண்டிருந்த சாகர காரியவசத்தைப் பார்த்த கம்மன்பில, 'சாகர எப்படி சுகம்' என்று வினவியுள்ளார்.

இதற்கு சாகரவிடமிருந்து எந்தவொரு பதிலும் கிடைக்கவில்லை. 'சாகரவை நினைக்கும்போது உண்மையில் கவலையாக இருக்கின்றது. ஏனென்றால், எரிபொருள்களின் விலை அதிகரிப்பைக் காரணங்காட்டி, நான் பதவி விலக வேண்டும் என்று எழுதிக் கொடுக்கப்பட்டக் கடிதத்தில் சாகர கையெழுத்திட்டுள்ளார்' என்று கம்மன்பில கவலை வெளியிட்டுள்ளார். (ம-4)

# ரணிலுடன் 'டீலா' பெரமுன மறுப்பு



கொழும்பு, ஜூன் 29

சிறிலங்கா பொதுஜன பெரமுனவுக்கும், ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு மிடையில் எவ்வித 'டீலும்' கிடையாது என்று அந்தக் கட்சியின் பொதுச்செயலாளர் சட்டத்தரணி சாகர காரியவசம் தெரிவித்தார்.

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் ஊடகவியலாளர் மாநாடு கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்றது.

இதன்போது ரணில் விக்கிரமசிங்கவின் நாடாளுமன்ற வருகையின் பின்னணியில் மொட்டுக் கட்சியின் தலைவரான மஹிந்த ராஜபக்ச இருக்கின்றார் என்று வெளியாகும் தகவல்கள் தொடர்பில் எழுப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிறிலங்கா பொதுஜன பெரமுன 'டீல்' அரசியல் நடத்தும் கட்சி கிடையாது. மக்களுக்கான அரசியலை முன்னெடுக்கும் கட்சி. நாட்டிலுள்ள பலமான, அதிக அங்கத்தவர்களைக்கொண்ட கட்சி எமது கட்சியாகும். எனவே, எவருடனும் 'டீல்' போட வேண்டிய அவசியம் எமது கட்சிக்குக் கிடையாது. ரணில் விக்கிரமசிங்கவின் நாடாளுமன்ற வருகையால் குழப்பிபோயுள்ளவர்களே இவ்வாறான தகவல்களைக் கட்டவிழ்த்து விடுகின்றனர். அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்ற நாம் 'டீல்' போட மாட்டோம். மக்களுடன் மட்டுமே எமக்கான 'டீல்' உள்ளது - என்றார். (ம-4,44)





# அம்புலன்ஸ், கனரக வாகனம் எதிரெதிராக மோதி விபத்து

## சாரதிகள் இருவருக்கும் காயங்கள்

திருகோணமலை - மட்டக்களப்பு பிரதான வீதி சீனக்குடா பகுதியில் அம்புலன்ஸ் மற்றும் கனரக வாகனம் ஆகியவை நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகின. இந்த விபத்து நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது. இதில் இரு வாகனங்களின் சாரதிகளுக்கும் காயம் ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

திருகோணமலையில் இருந்து கிண்ணியா நோக்கிச் சென்ற அம்புலன்ஸ் வண்டியும், கிண்ணியாவில் இருந்து திருகோணமலை நோக்கி வந்த கனரக வாகனமுமே ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகின. விபத்து தொடர்பில் சீனக்குடா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (ப)



# அரசை விட்டு வெளியேறேன்

## கம்மன்பில பிடிவாதம்

கொழும்பு, ஜூன் 29

தற்போதைய அரசை உருவாக்கியது நானே. எனவே ஒருபோதும் அரசை விட்டு வெளியேற மாட்டேன் என்று வலு சக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய மக்கள் சக்தியால் எனக்கு எதிராகக் கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையால் எந்தவிதமான அச்சமும் இல்லை. இது எனக்கு எதிராகக் கொண்டுவரப்படும் முதலாவது நம்பிக்கையில்லாப் பிரேரணையல்ல.

நம்பிக்கையில்லாப் பிரேரணையை தோற்கடிப்பதற்காக அரசிலுள்ள பலர் எனக்கு ஆதரவாக உள்ளனர். யார் என்ன தான் கூறினாலும், அரசுக்குள் இருக்கும் பெரும்பாலானவர்கள் எனக்கு ஆதரவளிப்பார்கள் - என்றார். (ம-4)

# கம்மன்பிலவுக்கு எதிரான பிரேரணை: கட்சித்தலைவர்கள் கூட்டத்தில் முடிவு

கொழும்பு, ஜூன் 29

வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராக, ஐக்கிய மக்கள் சக்தியால் கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதம் தொடர்பில் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்படவுள்ளது.

கட்சித் தலைவர்களின் கூட்டம் அடுத்த மாதம் 6ஆம் திகதியே நடைபெறும். அதில் கலந்துரையாடி தீர்மானிக்கப்படும் என்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார். எரிபொருள்களின் விலை அதிகரிப்புக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியின் 43 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்டு, சபாநாயகரிடம் நம்பிக்கையில்லாப் பிரேரணையை சமர்ப்பித்துள்ளனர். (ம-4)

# பொலிஸ் ஆய்வாளர் பதவி: பட்டதாரிகளுக்கு வாய்ப்பு

கொழும்பு, ஜூன் 29

எதிர்காலத்தில் தலைமைப் பொலிஸ் ஆய்வாளர் பதவிக்கு, பட்டதாரிகளை நேரடியாக நியமிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது என்று இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

தற்போது உதவி காவல் கண்காணிப்பாளர் பதவிகளுக்கு மட்டுமே பட்டதாரிகள் நேரடியாக சேர்க்கப்படுகின்றனர். இது தொடர்பான முன்மொழிவு ஏற்கனவே ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. தலைமை பொலிஸ் ஆய்வாளர் பதவிக்கு நியமிக்கப்படும்போது, பட்டதாரிகள் பொதுமக்களுடன் அவர்கள் செய்யும் கடமைகள் குறித்து கணிசமான, அளவான புரிதலைப் பெற்றுக்கொள்ள முடியும் என்ற உண்மையைக் கருத்தில் கொண்டு இந்தத் திட்டத்தை முன்வைத்துள்ளோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிவந்துவிட்டது...!
யாழ். மாவட்ட பிரபல ஆசிரியர்களின் கை வண்ணத்தில்
2021 இரண்டாம் தவணைக்கான
தரம்-03, தரம் 02 மாணவர்களுக்குரிய
பயிற்சி கையேடுகள்...!



அரச பாடத்திட்டத்திற்கமைவானது தமிழ், கணிதம், சுற்றாடல், ஆங்கிலம், சிங்களம், சமயம் ஆகிய சகல பாடங்களுக்கும் உரிய பயிற்சிகள். பொது அறிவு, பொது விவேகம் சார் பயிற்சிகள்

எமது முகவர்கள் மற்றும் சகல புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.
உங்கள் பிரதிகளுக்கு உதயன் பத்திரிகை முகவர்களிடம் பதிவுகளை மேற்கொள்ளுங்கள்.
தொடர்பு: 077 656 9617
எமது வெளியீடுகளை மாதாந்தம் எதிர்பாருங்கள்..!!



புலமைச்சுடர்
தொடர் வெளியீட்டின் தரம்-04, தரம்-05 ற்குரிய 5வது வெளியீட்டை விரைவில் எதிர்பாருங்கள்
மாதிரி வினாத்தாள் தொகுதிகள் இவ்விரண்டு மற்றும் எதிர்பார்க்கை தமிழ், கணிதம், சுற்றாடல் மாதிரி வினாத்தாள்கள் பிரபல ஆசிரியர்களின் கைவண்ணத்தில் முற்றிலும் புதிய வடிவத்தில்

தொடர்பு: 021 493 2222
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
E-mail:pulamaisudar@uthayan.com

### தமிழ்த் தலைமைகள்
# நேர்மையாக செயற்படின் விடுதலை சாத்தியமாகும்
## கஜேந்திரன் எம்.பி. கருத்து

வவுனியா, ஜூன் 29
"தமிழ்த் தலைமைகள் நேர்மையாக, தமிழ் மக்களுடைய நலன்களின் அடிப்படையில் செயற்பட்டாலேயே அனைத்து அரசியல் கைதிகளுடைய விடுதலையையும் சாத்திய மாக்க முடியும்" என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,
கைதிகளாக இருப்பவர்கள் எங்களுடைய சொந்தங்கள், தமிழ் உறவுகள். இவர்களில் தமிழ்த்தேசத்தின் விடுதலைக்காகப் போராடிய முன்னாள் போராளிகளும் இருக்கிறார்கள். அதேநேரத்தில் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்தமைக்காக, சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டவர்களும் இருக்கிறார்கள். அனைவரும் இந்தக் கொடிய பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட வர்கள்.

தற்போது 16 அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளமை மகிழ்ச்சியான விடயம். ஆனால், இந்த விடுதலை ஒரு நல்லெண்ண நோக்கத்தில் நடைபெறவில்லை. மாறாக, தமிழ் மக்கள் மீது இனப்படுகொலையை மேற்கொண்டிருக்கின்ற கோத்தாபய அரசு தமிழர்களுடைய தேசத்தையோ, இறைமை யையோ, சுயநிர்ணய உரிமையையோ அங் கீகரிக்க அடிப்படையான ஒரு சமஸ்டித் தீர்வை வழங்குவதற்கு தயார் இல்லை.

சிங்கள குடியேற்றங்களையோ, பௌத்த மய மாக்கலையோ நிறுத்துவதற்கும் தயாராக இல்லை. தமிழ் மக்கள்மீது நடத்தப்பட்ட இனப் படுகொலைக்கு ஒரு பொறுப்புக்கூறல் செய் வதற்கும் தயார் இல்லை.

அதேவேளை, இராணுவத்தினரிடம் சரண டைந்தவர்களுக்கு என்ன நடந்தது என் பதை அரசு வெளிப்படுத்துவதற்கும் தயா ரில்லை.

மேலும் கோத்தாபய அரசு சீனாவோடு நெருங்கிச்சென்று கொண்டிருக்கிற நிலை யில், சிறீலங்காமீது சர்வதேச அழுத்தங்கள் அதிகரித்துக்கொண்டு வருகின்றன.

அதிகரிக்கின்ற சர்வதேச அழுத்தங்களை அவர்கள் கையாள்வதற்காக இந்த விடு விப்பை செய்திருக்கிறார்கள். அதுவும் அந்த 16 பேரில் 14 பேர் வரும் ஆண்டு ஏப்ரல், மே அளவிலே விடுதலைசெய்யப்படவுள்ளனர். - என்றார். (த-110)

# யாழில் தொற்று 5,000 தாண்டியது
## மாவட்டச் செயலர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஜூன் 29
யாழ்ப்பாண மாவட்டத்தில் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் எண் ணிக்கை 5 ஆயிரத்து 190 ஆக அதிகரித்துள்ளது என்று மாவட்டச் செயலர் க.மகேசன் தெரிவித்தார்.

மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவி யலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,
தொற்று அதிகரித்த நிலை யில், கொரோனா இறப்புக்களின் எண்ணிக்கை 87 ஆக பதிவா கியுள்ளது.

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்துக்குட்பட்ட சாவற்காடு கிராம அலுவலர் பிரிவும் யாழ்ப்பாண பிரதேச செயலகத்துக்குட்பட்ட ஜே/69 மற்றும் ஜே/71 கிராம அலுவலர் பிரிவுகளும் கரவெட்டி பிரதேச செயலகத்துக்குட்பட்ட கரணவாய் பகுதியும் தனிமைப்ப டுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. 4ஆயிரத்து 150 பேர் குண மடைந்து வீடு திரும்பியுள்ளனர். மிகுதிப்பேர் இடைநிலைச் சிகிச்சை நிலையங்களில் சிகிச்சை பெற்றுவருகின்றனர். 8 ஆயி ரத்து 297 குடும்பங்களுக்கு 10 ஆயிரம் ரூபா உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன- என்றார். (த-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள்





**மேடம்:** காலநேரம் பார்க்காமல் உழைக்க வேண்டி வரக்கூடும். முடிவுகள் எடுப்பதில் தயக்கம், தடுமாற்றம் வந்து நீங்கும். பிள்ளைகளிடம் அதிக கண்டிப்பு காட்ட வேண்டாம்.



**இடபம்:** பணத்தட்டுப்பாடு நீங்கும். இயல்பான கோபம் வரும். நண்பர்களுக்கு இடையே இருந்த மனக்கசப்பு நீங்கும். பேச்சினால் தொல்லை ஏற்படாதபடி கவனமாக இருங்கள்.



**மிதுனம்:**பிறருடைய நீண்ட நாள் பிரச்சினைக்குத் தீர்வு கொடுப்பீர்கள். உங்களின் நேர்மையான உழைப்புக்கு அங்கீகாரம் கிடைக்கும். எதிர்ப்புகளைச் சமாளித்து நிம்மதி காண்பீர்கள்.



**கடகம்:** மனஅமைதி கூடும். பிள்ளைகளால் சிறு விரயம் உண்டு. உடன் இருப்பவர்களால் ஏற்பட்ட இடையூறுகள் அகலும். மன அழுத்தம் நீங்கும். பணிகளை விரைந்து முடிப்பீர்கள்



**சிம்மம்:** உங்களைக் குறை கூறியவர்களுக்குப் பதிலடி கொடுப்பீர்கள். தேங்கிக் கிடந்த வேலைகள் மடமடவென்று முடியும். உங்களின் திறமையைக் கண்டு மேலதிகாரி வியப்பார்



**கன்னி:** பதவி உயர்வு, சம்பள உயர்வுக்கான முயற்சி செய்வீர்கள். வெளிநாடு தொடர்பான விடயங்களில் ஈடுபாடு ஏற்படும். உறவினரின் ஆதரவு அதிகரிக்கும். மனநிம்மதி கூடும்.



**துலாம்:** உறவினர் வீட்டு சுபநிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். புதிய வாய்ப்புகள் அதிகரிக்கும். நன்மைகள் கூடுதலாகும். காத்திருந்த திருமணம் சிறப்பாக முடியும்.



**விருச்சிகம்:** தடைகள், தாமதங்கள் இருப்பது பற்றிச் சலிப்படையாதீர்கள். பண விவகாரங்களில் சிறிதளவு மனஅழுத்தம் வந்து நீங்கும். புதிய திட்டங்களைத் தொடங்குவீர்கள்.



**தனுசு:** உங்கள் மேல் இருந்த குற்றச்சாட்டுக்குத் தீர்வு கிட்டும். பொறுப்புக் காரணமாக பணியில் சீரான வளர்ச்சியைக் காணலாம். பணிச்சுமை குறைவதற்கான யுக்திகளைக் காண்பீர்கள்.



**மகரம்:** உறவினிடையே உங்கள் கை ஓங்கும்படி உயர்வு வரும். ஆடம்பரச் செலவைத் தவிர்க்க முயற்சி செய்யுங்கள். சேமிப்பை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் எடுப்பீர்கள்.



**கும்பம்:** எதிர்பாலின நட்பால் ஆதாயம் உண்டு. கவனமாக இருங்கள். சிறு உபாதை பற்றிக் கவலை வேண்டாம். மன உற்சாகம் உண்டு. உறவினரிடையே புகழ் கூடும்.



**மீனம்:** பிள்ளைகளால் ஏற்பட்ட மனஅழுத்தம் அவர்களாலேயே தீரும். சிறு பயணம் மகிழ்ச்சி தரும். சிறிய நற்செய்தி உண்டு. வேற்று இன மனிதர்களுக்கு உதவுவதால் மகிழ்வீர்கள்..



## படித்ததில் பிடித்தது

உலகப் புகழ்பெற்ற கால்பந்து வீரரான "சாடியோ மானே செனகல்" (மேற்கு ஆபிரிக்கா), இந்திய ரூபாயில் வாரத்துக்கு ரூ .140 மில்லியன் (14கோடி) சம்பாதிக்கிறார் என மதிப்பிடப்பட்டுள்ளது...

அவ்வளவு சம்பாதிக்கும் அவர் டிஸ்பிளே உடைந்த மொபைலுடன் பல இடங்களில் காணப்பட்டார்.... ஒரு நேர்காணலில், அதைப் பற்றி அவரிடம் இதை பற்றி கேட்கப்பட்ட போது, "நான் அதை சரி செய்வேன், டிஸ்பிளே மாற்றி விடுவேன்" என்றார்...

"நீங்கள் ஏன் 'டிஸ்பிளே' மாற்ற வேண்டும், பல கோடிகள் சம்பாதிக்கும் நீங்கள் புதிய கைபேசியே வாங்கலாமே" என்று அவரிடம் கேட்கப்பட்ட போது என்னால் ஆயிரம் கைபேசிகள் , 2 ஜெட் விமானங்கள், டயமண்ட் கடிகாரங்களை வாங்க முடியும் ,ஆனால் இதையெல்லாம் நான் ஏன் வாங்க வேண்டும்?.... நான் வறுமையைப் பார்த்திருக்கிறேன், சாப்பாட்டுக்கு கஷ்டபட்டுள்ளேன்... என்னால் படிக்க முடியவில்லை,

எனக்கு காலணிகள் இல்லை, காலணிகள் இல்லாமல் விளையாடுவேன், நல்ல உடைகள் இல்லை,

ஆனால் இன்று நான் நிறைய பணத்தை சம்பாதிக்குறேன் .. அதனால்தான் சம்பாதித்த பணத்தில் மக்கள் படிக்கும்படி பள்ளிகளை உருவாக்கியுள்ளேன்.. என் நாட்டில் உள்ள ஏழை குழந்தைகளுக்கு புதிய காலணிகளும், உடைகளும், உணவும் கொடுக்குறேன்... வசதியாக வாழ்வதற்கு பதிலாக அதை என் மக்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்" என்றார்...

twitter.com/@RoyalEnfieldu

தனிமை நிரம்பிய ஆண்களின்
பிற்பகுதி வாழ்க்கையில்
நண்பர்கள் தருகிற வெளிச்சத்தை
வேறு யாராலும் தரமுடிவதில்லை.

twitter.com/@manipmp

அடகு வைக்கும் நகைக்கு பெயர்
தங்க நகை அல்ல
வீட்டில் தங்காத நகை

twitter.com/@im_Navyaa

நாம் தாங்காத வரையில்
மற்றவர்களின் வலி
நமக்கு கேலியாகத்தான் இருக்கும்.



## ஷாருக்கானுடன் ஜோடி சேரும் நயன்தாரா?

இயக்குநர் அட்லீ, கடந்த 2013 ஆம் ஆண்டு வெளியான 'ராஜா ராணி' படம் மூலம் இயக்குநராக அறிமுகமானார். தனது முதல் படத்திலேயே முத்திரை பதித்து அனைவரது கவனத்தையும் ஈர்த்த அவர், அதனைத்தொடர்ந்து விஜய் நடிப்பில் 'தெறி', 'மெர்சல்', 'பிகில்' என ஹாட்ரிக் ஹிட் படங்களை கொடுத்து, முன்னணி இயக்குநராக உயர்ந்தார்.

அடுத்ததாக பாலிவுட் நடிகர் ஷாருக்கான் நடிக்கும் படத்தை இயக்கஉள்ளார் அட்லீ. பிரம்மாண்ட செலவில் உருவாகும் இந்தப் படத்துக்கான ஆரம்பகட்ட பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றன. இந்நிலையில், இப்படத்தில் ஷாருக்கானுக்கு ஜோடியாக நடிகை நயன்தாராவை நடிக்க வைக்க பேச்சு வார்த்தை நடத்தப்பட்டு வருகிறது எனத் தகவல் வெளியாகி உள்ளது.










Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# நார்ச்சத்துமிக்க உணவுகள்

நம் உடலுக்கு நார்சத்து மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது ஆகும். இது உடலுக்கு பல்வேறு நன்மைகளை வழங்குகிறது. சிலவகை நார்சத்துக்கள் உடல் எடையை குறைப்பது, இரத்தத்தில் உள்ள சர்க்கரை அளவுகளை குறைப்பது மற்றும் மலச்சிக்கலை சரி செய்யும் தன்மை கொண்டுள்ளன.

நாள் ஒன்றுக்கு ஆயிரம் கலோரிகளுக்கு 14 கிராம் நார்சத்தை நாம் உட்கொள்வது அவசியம் என ஊட்டச்சத்து நிபுணர்கள் தெரிவித்து உள்ளனர். அந்த வகையில் ஆண்கள் தினமும் 24 கிராம் மற்றும் பெண்கள் 38 கிராம் வரை உட்கொள்ள வேண்டும்.

உடலில் நார்சத்தை அதிகரிப்பது சற்றே எளிய காரியம் தான். இதற்கு உணவில் நார்சத்து அதிகம் நிறைந்த பொருட்களை சேர்த்து கொள்ள வேண்டும். நார்சத்து அதிகம் நிறைந்த உணவுகள் பற்றி பார்ப்போம்.

**பனங்கிழங்கு**

பனங்கிழங்கில் அதிக அளவில் நார்சத்து உள்ளது. இது மலச்சிக்கலை போக்கும் வல்லமை கொண்டது, மற்றும் உடலுக்கு வலிமை சேர்க்கும். பித்தம் அதிகம் உள்ளவர்கள் பனங்கிழங்கை அளவோட சாப்பிடுவது நன்று.

**பேரிக்காய்**

அதிக சுவை மற்றும் ஊட்டச்சத்து நிறைந்த பழங்களில் பேரிக்காய் மிகவும் பிரபலம். இதில் ஏராளமான நார்சத்து நிறைந்து உள்ளது.

**அப்பிள்**

வேண்டாம் என யாரும் கூற முடியாத பழமாக அப்பிள் விளங்குகிறது. தினமும் ஓர் ஆப்பிள் உண்ணுபவன் மருத்துவரை அணுகத் தேவையில்லை என்ற பழமொழி மூலம் இதன் முக்கியதுவத்தை அறியலாம்.. இதுவும் நார்சத்து அதிகம் நிறைந்த பழம் ஆகும்.

**வாழைப்பழம்**

வாழைப்பழங்களில் ஊட்டச்சத்து மட்டுமின்றி விட்டமின் சி, விட்டமின் பி6 மற்றும் பொட்டாசியம் போன்ற சத்துகள் நிறைந்துள்ளன. பச்சை வாழைப்பழத்தில் உள்ள ஸ்டார்ச் நம் உடலுக்கு நார்சத்தை வழங்குகிறது.

**கரட்**

சமைக்காமல் சாப்பிடக்கூடிய சத்துள்ள காய்கறி வகை கரட். இதில் விற்றமின் கே, விற்றமின் பி6, மக்னீசியம், பீட்டா கரோடின் உள்ளிட்டவை நிறைந்துள்ளது. உணவில் அடிக்கடி கரட் சேர்த்து கொண்டால் நார்சத்து தானாக அதிகரிக்கும்.

**பீட்ரூட்**

போலேட், இரும்புச் சத்து, தாதுச் சத்து, மங்கனீஸ் மற்றும் பொட்டாசியம் என பலவகை சத்துக்கள் நிறைந்த காய்கறி பீட்ரூட். இது நம் உடலில் இரத்த அளவுகளை சீராக வைத்துக் கொள்ள உதவுகிறது.

**சர்க்கரை வள்ளிக்கிழங்கு**

இனிப்பு சுவை நிறைந்த சர்க்கரை வள்ளிக்கிழங்கில் ஏராளமான மாச் சத்து நிறைந்துள்ளது. இது தவிர நார்சத்து, இரும்பு சத்து, செலினியம் எனும் விட்டமின் என ஏராளமான சத்துகள் சர்க்கரை வள்ளிக்கிழங்கில் நிறைந்துள்ளது.

**பாதாம்**

பாதாம் பருப்பில் விட்டமின் இ, மங்கனீஸ் மற்றும் மக்னீசியம் போன்ற ஆரோக்கியம் நிறைந்த கொழுப்புகள் உள்ளன. அன்றாட உணவில் சரியான அளவில் இதனை சேர்த்து கொண்டால் உடலுக்கு தேவையான நார்சத்து தானாக அதிகரிக்கும்.

**சுண்டல்**

அதிக ஊட்டசத்து நிறைந்த உணவாக சுண்டல் இருக்கிறது. இதுமட்டுமின்றி மினரல்கள் மற்றும் புரோட்டீன் அதிகம் நிறைந்த உணவாக சுண்டல் இருக்கிறது.

## அறிவோம்

அழுகையால் சிவனின் அன்பைப் பெற்ற அடியவர்
**மாணிக்கவாசகர்**
என்கடன் பணி செய்து கிடப்பதே என தொண்டாற்றியவர்
**திருநாவுக்கரசர்**
எல்லோரும் இன்புற்று வாழ வேண்டும் என விரும்பியவர்
**தாயுமானவர்**
கண்ணனை நினைத்து உருகி வாரணம் ஆயிரம் பாடியவர்
**ஆண்டாள்**
யயோதையாக மாறி கண்ணனைத் தாலாட்டியவர்
**பெரியாழ்வார்.**

## கண்ணீர் அஞ்சலி



எமது பிரதேச செயலக
உத்தியோகத்தரான
**முருகேசு சபாரத்தினம்**
அவர்களின் அன்புத் தாய்


**முருகேசு பரமேஸ்வரி**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவர்களின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பிரதேச செயலரும், உத்தியோகத்தர்களும்.**
**பிரதேச செயலக நலன்புரிச்சங்கம்**
**பிரதேச செயலகம், நெடுந்தீவு.**

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

**தோற்றம்**
05
04
1956



**மறைவு**
30
05
2021

**அமரர் கந்தையா குலேந்திரன்**

**திதி : வைகாசி தேய்பிறைப் பஞ்சமி**

**வெண்பா**

***ஆண்டு பிலவத்தில் வைகாசி தேய்பிறையில்***
***பூண்டு வரும் பஞ்சமி சேர்திதியில் நீண்டபுகழ்***
***கட்டுடை வாசர் குலேந்திரன் தன் உயிரை***
***விட்டுடலம் நீத்தார் விளம்பு***

அப்பா நீர் எங்கு சென்றீர்
அரசடியானிடம் தஞ்சம் அடைந்தீரோ
என்னவென்று நான் எண்ண
எங்கு தான் நான் தேட

ஐயா நீர்பட்ட வேதனைகள் கண்டு
உள்ளம் எல்லாம் குமுறுதையா ஏங்கித் தவிக்குதையா
எமக்கு அன்னையாய் தந்தையாய் ஆசானாய் ஆறுதல் தந்தீரே
அன்போடு அரவணைத்து ஆதரித்து' வந்தீரே!!!

சிட்டுக்குருவி போல் சிறகடித்து பறந்த நீர்
சிறகொடிந்த பறவையாய் சித்தம் கலங்கி நின்றீரே
காலமது கடந்தோடி விட்டதையா
மாதமொன்று ஆகியதோ மறக்க வில்லை உம் சிரித்தமுகம்

இறுதி மூச்சதனில் எம் தோளில் சாய்ந்தீரே
இனி என்னால் முடியாது எடுத்துவிடும் எனை என்றீர்
உம் குரல் கேட்டு இரங்கியதோ அரசடியான் உள்ளமது
எடுத்துவிட்டான் ஒரு நொடியில் எமை இங்கு தவிக்கவிட்டு

எங்கு நீர் சென்றாலும் எமை விட்டுப் பிரிந்தாலும்
சென்ற இடம் சிறப்புறவே சீர் பெற நீர் வாழ்ந்திடுவீர்.

**பிரிவால் துயருறும்**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 30ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மண்ணில் 24.10.1940 விண்ணில் 31.05.2021

## அமரர் சுப்பிரமணியம் தனேஸ்வரி

(காளிகோயிலடி, தங்கோடை, காரைநகர்)

கடந்த 31.05.2021 திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் "குலதிலகம்" அமரர் செல்வி தனேஸ்வரி சுப்பிரமணியம் அவர்களின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்ட உறவினர் நண்பர்களுக்கும், தொலைபேசி வாயிலாக எமது துயரத்தைப் பகிர்ந்து கொண்டவர்களுக்கும் எமது நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.
அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் 28.06.2021 திங்கட்கிழமை ஆலங்கன்று வைரவர் கோயிலடி அந்தியேட்டி மடத்திலும் வீட்டுக் கிருத்தியம் 29.06.2021 செவ்வாய்க்கிழமை அன்னாரது இல்லத்திலும் நடைபெறும்.
தற்போது கொரோனா தொற்றினால் நிலவும் சூழ்நிலை காரணமாக அனைவரையும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுக்கு அழைக்க முடியாமைக்கு மிகவும் மனம் வருந்துகிறோம்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஈழத்துச் சிதம்பர சௌந்தராம்பிகா சமேத சுந்தரேஸ்வரப் பெருமானை வேண்டுகிறோம்.

காளிகோயிலடி, தங்கோடை, காரைநகர். பெறாமக்கள்.

---

THE HALO TRUST

450 Thirunagar West
Kilinochchi
Sri Lanka

T: +94 (0) 212 285 466
vanni@halosrilanka.org
mail@halosrilanka.org
www.halotrust.org

## VACANCY ANOUNCEMENT FOR THE POSITION OF SAFEGUARDING OFFICER – MALE

### Re-advertised

The HALO Trust is a non-political and non-religious registered British charity, which removes land mines and other explosive remnants of war. HALO works in 25 countries and territories globally and has worked in Sri Lanka since 2002 with offices in Jaffna, Kilinochchi and Mullaitivu.
HALO is seeking talented and hardworking candidates for the role of Male Safeguarding Officer. In this position you will work together with the current HALO Safeguarding Officer. You will be focal point for HALO's workforce for any safeguarding incidents that might occur in the Programme, in which you will take on a counseling role and advise the Programme Management on how to proceed. In addition, you will be responsible for designing and delivering training to all staff and management on how to monitor approach and report safeguarding matters in the organization.
All applications must be submitted on or before 10th July 2021. Only successful candidates will be contacted. For further information, please contact 021 228 5466. HALO encourages applicants from all backgrounds.
Qualifications / Minimum requirements:

- Fluency in English and Tamil both verbal and written communication. Knowledge of Sinhala as well would be advantageous.
- Work experience as a social worker, counselor, GBV focal point gender focal point or community development officer is a strong added advantage.
- More than 3 years' experience in the relevant field.
- An educational background in social work, psychology, mental health and psychosocial support, community development or social sciences is an added advantage
- Candidates with experience in design and delivery of training modules would be of benefit.
- Candidates with experience in mediation board are encouraged to apply.
- Previous NGO or INGO experience are preferred.

Interested candidates must submit their CV with name and contact details to the below address or e-mail. In addition, please provide details of a minimum of two references. A reference check will be part of the selection process. Candidates who applied for this position in May are invited to submit a new application.
HR Manager
The HALO Trust,
450 Thirunagar West,
Kilinochchi.
hr@halosrilanka.org

---

# வீட்டில் உள்ள தொற்றாளர்கள் 1390 க்கு அழையுங்கள்

கொழும்பு, ஜூன் 29
கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகி, இடைநிலை சிகிச்சை மத்திய நிலையங்களுக்கு அழைத்துச்செல்லும் வரையில் வீடுகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கொரோனா நோயாளர்களுக்காக புதிய தொலைபேசி இலக்கமொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
குறித்த கொரோனா நோயாளர்கள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மருத்துவர்களிடம் தகவல்களைப் பெற்றுக்கொள்வதை இலகுபடுத்துவதற்காக இவ்வாறு விசேட தொலைபேசி இலக்கமொன்று செயற்படுத்தப்பட்டுள்ளது.
அதன்படி, 1390 என்ற தொலைபேசி இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (த-இ)

---

## அன்பான நன்றி

### ஜனாதிபதி திரு கோதபய ராஜபக்ஷ அவர்களுக்கு

**முன்னாள் விடுதலைப் புலி கைதிகளை விடுவித்து தமிழ் மக்களின் இதயங்களில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியதிற்கு நன்றி.**

இனிமையான கருணை என்பது உத்தமனுக்கு உண்மையான அடையாளம் : வில்லியம் ஷேக்ஸ்பியர்

ஒரு உத்தமனுக்கு இறுதி சோதனை அவருக்கு எந்த சேவையும் செய்ய முடியாதவர்களுக்கு அவர் அளிக்கும் மரியாதை : வில்லியம் லியோன் பெல்ப்ஸ்

**பௌத்த இந்து ஒற்றுமை.**
க.கணேசநாதன், ஸ்ரீ நாகவிகாரை, யாழ்ப்பாணம்

---

## Srilanka State Trading (General) Corporation Ltd

No:100, Nawam Mawatha, Colombo-02.

# வேலைவாய்ப்பு

### விற்பனை மேம்பாட்டு உதவியாளர் (யாழ்ப்பாணம் Showroom)

பின்வரும் நிலைப்பாட்டின் விளைவாக விதிவிலக்கான ஒருமைப்பாடு மற்றும் திறமை கொண்ட முழுவு சார்ந்த மற்றும் சுய ஊக்கமுள்ள நபர்களை நாங்கள் தேடுகிறோம்.
**விற்பனை மேம்பாட்டு உதவியாளர் பதவி - 02 காலியிடங்கள்**
**(ஒப்பந்த அடிப்படையில்)**

**வெளி விண்ணப்பதாரிகள்**
க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் ஆறு பாடங்கள் ஒரே தடவையில் சித்தியடைந்திருப்பதுடன் பின்வரும் நான்கு பாடங்கள் Credit Passes பெற்றிருத்தல் வேண்டும்.
i. சிங்களம்/தமிழ்
ii. ஆங்கிலம்
iii. கணிதம்

மற்றும்

க.பொ.த உயர்தர பரீட்சையில் மூன்று பாடங்களில் (பொது பரீட்சை தவிர) தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

- விண்ணப்பதாரர் விற்பனை பிரதிநிதி துறையில் அனுபவமுள்ளவராக இருத்தல் மேலதிக தகைமையாகும்.

**பொதுவான நிபந்தனைகள்:**
- வயது : 18 வயது - 45 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்
- மற்றவை : i. இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்
  ii. பதவியின் கடமைகளை நன்கு நிறைவேற்றவும், நாட்டின் எந்தப் பகுதியிலும் பணியாற்றவும் உடல் மற்றும் மனரீதியாக இருக்க வேண்டும்.
  iii. சிறந்த தார்மீக தன்மை கொண்டவராக இருத்தல் வேண்டும்.
- சம்பளம் பேச்சுவார்த்தைக்கு உட்பட்டது.

**விண்ணப்ப செயல்முறை:**
கல்வி தொழில்முறை தகுதி மற்றும் இரண்டு உறவினர் அல்லாதவர்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் தொலைபேசி எண்களுடன் அனுபவம் ஆகியவற்றுக்கான அனைத்து சான்றிதழ்களின் நகல்களுடன் முழு சுயவிவர தரவை வழங்கும் விண்ணப்பதாரர்கள் 2021 ஜூலை 14 அல்லது அதற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.
பின்வரும் துறைகளின் விண்ணப்பதாரர்கள் (சட்டரீதியான சபை / பொது நிறுவனங்கள் / முழு அரசு நிறுவனங்கள்) தங்கள் விண்ணப்பங்களை அந்தந்த நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் அனுப்ப வேண்டும். இறுதி திகதிக்கு பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
முழுமையற்ற விண்ணப்பங்கள் அறிவிப்பு எதுவுமின்றி நிராகரிக்கப்படும்.

TEL : 011 2384603 / 011 242 2341 / 2440880
FAX : 011 2447970
E-MAIL : lankagen@sltnet.lk
WEB : www.stc.lk

Chairman
Srilanka State Trading (General) Corporation Ltd
No.100, Nawam Mawatha,
Colombo-02.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆமையும் இரண்டு வாத்துகளும்

அது ஒரு அழகிய ஏரி. அந்த ஏரியில் அழகிய ஆமை ஒன்று தனது இரண்டு வாத்து நண்பர்களுடன் வாழ்ந்து வந்தது. தினமும் அந்த இரு வாத்துகளை ஆமை சந்திப்பது வழக்கம்.

ஒருநாள் அந்த இரண்டு வாத்துகளும் வருத்தத்துடன் காணப்பட்டன. இதைக் கண்ட ஆமை, "ஏன் இருவரும் வருத்தத்துடன் உள்ளீர்கள்" என்று கேட்டது. பல வருடங்களாக மழை பெய்யாத காரணத்தால் இந்த ஏறி வறண்டு வருகிறது. இன்னும் சில காலத்துக்கு பிறகு இங்கு முற்றிலும் நீர் வறண்டுவிடும். எனவே நாங்கள் இருவரும் பக்கத்து ஊரில் உள்ள ஏரிக்குச் செல்ல இருக்கிறோம்" என்று வாத்துகள் கூறியது.

என்னை விட்டு செல்வதற்கு உங்களுக்கு எப்படி மனம் வந்தது. நீர் குறைந்தால் உங்களுக்கு உணவுதான் குறையும், எனக்கோ உயிரே போய்விடும். என்மீது உங்களுக்கு அன்பு இருக்குமானால் என்னையும் அழைத்துச் செல்லுங்கள்", என்றது ஆமை.

"உனக்கு தான் இறக்கைகள் கிடையாதே! உன்னை அழைத்துப்போக எங்களால் எப்படி முடியும்?" - என்றது வாத்து. அதற்கு ஆமை ஓர் உபாயம் செய்யலாம், ஒரு நீண்ட குச்சியை எடுத்து வாருங்கள். நான் நடுவில் என்னுடைய பற்களால் கொட்டியாய் பிடித்துக் கொள்கிறேன். நீங்கள் இருபக்கமும் பிடித்து தூக்கிக் கொண்டு பறந்து செல்லுங்கள்", என்றது ஆமை.

"நாங்கள் உயரப்பறக்கும்போது நீ வாயைத் திறந்தால் கீழே விழுந்து இறந்துவிடுவாய்" என்று வாத்துகள் கூறியன.

அப்படியானால் "பறக்கும்போது நான் வாய் போசாமல் இருக்கின்றேன்" என்று ஆமை கூறியது. இரு வாத்துகளும் இருபக்கமும் குச்சியை பிடித்து பறக்க நடுவில் ஆமை வாயில் பற்றிக்கொண்டு பறந்தன.

சிறிது தூரம் பறந்தவுடன் ஆமை சந்தோஷத்தில் துள்ளிகுதிக்க ஆரம்பித்தது. இரு வாத்துகளும் ஆமையிடம் "சிறிது நேரம் அமைதியாய் இரு. இல்லாவிடில் நீ கீழே விழுந்து விடுவாய்", என்று கூறியது.

செல்லும் வழியில் வாத்துகள் ஆமையுடன் பறந்து சொல்வதைப்பார்த்த மக்கள் வாத்துகள் எதையோ தூக்கிக்கொண்டு போகின்றன என கூச்சலிட்டனர். ஆமையின் கெட்ட நேரம் அந்த வார்த்தைகள் அதன் காதில் விழுந்தது. இந்த மக்கள் ஏன் இப்படி கூச்சலிடுகின்றனர் என வாய்திறந்து பேச அது பிடித்திருந்த பிடி விட்டுவிட கீழே விழத் தொடங்கியது. கீழே விழுந்த ஆமை உடல் சிதறி இறந்தது.

**வருமுன் காப்போனும், சமயோசித புத்தியுடையவனும் சுகம் பெறுவார்கள்.**

## இளமை பெயர்கள்

தவளை




குஞ்சு , பேத்தை

பலா,மா,வேம்பு



கன்று

சிங்கம்



குட்டி குருளை

## பொது அறிவு

01 . வாத்தைத் தேசிய பறவையாகக் கொண்ட இரு நாடுகள்?
கனடா, ஜாவா

02 .பழங்காலத்தில் சேரன் தீவு என்று அழைக்கப்பட்ட நாடு?
இலங்கை

03. உலகில் அதிக அருங்காட்சியங்கள் உள்ள நாடு? ஜெர்மனி

04. திராட்சை மலரை தேசிய மலராக கொண்டுள்ள நாடு?
சீனா

05 கண் இல்லாத உயிரினம்?
மண்புழு

06. தோலினால் சுவாசிக்கும் உயிரினம்?
மண்புழு

07. மேல் தாடையை அசைக்கும் விலங்கு?
முதலை

08. மூக்கில் பல் இருக்கும் விலங்கு?
முதலை

09. வயிற்றில் பல் இருக்கும் உயிரினம்?
நண்டு

10. வயிறும் ஜீரண உறுப்பும் இல்லாத உயிர்?
ஈசல்





# சாப்பிட்டதும் தண்ணீர் குடிக்கலாமா...

உணவு சாப்பிட்டதும் குளித்தால், உடலுக்கு கேடு ஏற்படும். அதற்கு அறிவியல் காரணமும் உள்ளது.

சருமத்தில் சேர்ந்த அழுக்கு, குளிக்கும்போது வெளியேறும். உடனே உடல் செல்கள் புத்துணர்வு பெற்று அதிக ஆற்றலுடன் இயங்கும். இதனால் தான், குளித்து முடித்ததும் பசி எடுக்கிறது.

உணவை ஜீரணிக்க நொதிகள் தேவை. சாப்பிட்டவுடன் குளித்தால் உடலில் குளிர்ச்சி தன்மையால் நொதிகள் சுரக்காது. அஜீரணத்துக்கு வழி வகுக்கும். சாப்பிட்டதும் குளித்தால், செரிமாண மண்டல செயல்பாடு குறைந்து, மலச்சிக்கல் மற்றும் வயிறு சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்பு உண்டு.



சாப்பிடும் போது, இடையே தண்ணீர் அருந்த வேண்டாம். சாப்பிடும் முன் அல்லது பின் தண்ணீர் அருந்த வேண்டாம். அருந்தினால், செரிமான சுரப்பிகளின் செயல்திறன் குறைந்து, உடல் ஆரோக்கியத்துக்கு பங்கம் ஏற்படும்.

சாப்பிடும் போது அல்லது சாப்பிட்ட பின், அதிகமாக தாகம் எடுத்தாலோ, விக்கல் ஏற்பட்டாலோ மட்டும், குறைந்த அளவில் தண்ணீர் குடிக்கலாம். இவ்வாறு செய்வதால், உடல் எடை அதிகரிக்காது.

சாப்பிட்டு, 30 நிமிடத்துக்குப் பின், தண்ணீர் அருந்தலாம்.

உணவுடன், மோர் மற்றும் தயிர் உட்கொள்ளலாம். இது உடலுக்கு குளிர்ச்சி தரும் செரிமானத்துக்கு உதவும்.

மூளை சுறுசுறுப்பாக இயங்க தண்ணீர் முக்கியமானது.

வேலை நேரத்திலும், சோர்வின் போதும், தண்ணீர் பருகுவதால், மூளை சுறுசுறுப்பாகும்.

காலை வேளையில், அதிகம் தண்ணீர் அருந்தினால், உடலில் வறட்சி ஏற்படாது மாலையில், குறைவாக தண்ணீர் அருந்தினால் இரவு நேரத்தில் அடிக்கடி சிறுநீர் தொந்தரவு ஏற்படாது.

தண்ணீரில், எலுமிச்சை சாறு மற்றும் தேன் கலந்து குடித்தால், உடலில் சக்தி அதிகரிக்கும். நச்சு அழிந்து, உடல் உறுப்புகள் சிறப்பாக செயற்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீழ்ந்து இருவர் காயம்

வாகனங்களிலிருந்து வீழ்ந்து காயமடைந்த இருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். இந்தச் சம்பவங்கள் நேற்று இடம்பெற்றன. தென்மராட்சி தெற்கு மறவன்புலவு பகுதியில் வீதி வளைவில் திரும்பிய வேளையில் மோட்டார் சைக்கிள் சில்லு சறுக்கியதில் வீழ்ந்த 42 வயது குடும்பத்தாருக்கு கையில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

மீசாலை ப் பகுதியில் ரேசிங் சைக்கிளில் வேகமாகச் சென்ற 19 வயது இளைஞன் முன்சில்லு பிரேக்கை அழுத்திய போது தூக்கி வீசப்பட்டு கற்குவியலுக்கு மேல் வீழ்ந்ததில் தலையில் காயமேற்பட்டது. இருவரும் சாவகச்சேரி மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். (த-9)

## REGIONAL DIRECTORATE OF HEALTH SERVICES, JAFFNA
## INVITATION FOR BIDS (IFB)
### Procurement of Office Equipment, Electronic Items & Rent for Staff Canteen

A. The Regional Procurement Committee invites sealed bids from eligible and qualified bidders for the Supplies, goods as specified following Tables.
01) Office Equipment
02) Electronic Items & Staff Canteen
Bidding will be conducted through National Competitive Bidding Procedure

B. To be eligible for contract award the successful bidder shall not have been blacklist and shall need the following requirements
01) Bidders shall have valid business registration
02) and business registration for supply of respective Supplies and Service
03) Regional preference and CIDA grade preference will be apply as stipulated in Public Finance circular No 4/2016(11)

C. Interested eligible bidders may obtain further information from the Regional Director of Health Services, Jaffna Conduct No (021 2222278/4557 ext 20), during the office hours and inspect the Bidding Documents at the same address any working days for 9.00am to 3.00pm except 12.30 to 13.30 hours

D. A complete set of English Bid documents may be purchased by interested bidders on the submission of "Application for Bid Documents" available in this office and upon payment of a **non refundable fee as** specified in the table by cash on working days from 30.06.2021 to 13.07.2021 during 09.00 Hours to 15.00 Hours.

E. Bids shall be delivered to Chairmen, Regional Procurement Committee , Regional Directorate of Health Services, No.572/3, Hospital Road ,Jaffna on or before 10.00 Hours of 14.07.2021. Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of bidder's representatives who choose to attend.

F. Bid shall be valid for a remind 90 days from the last date fixed for receiving of Bids or any extended period and Bid Security valid for 118days from the bid opening.

G. Pre-bid Conference will be held at Conference Hall, Office of the Regional Director of Health Services, Jaffna commencing at 10.00am on 07.07.2021.
01) Table I – 10.00am
02) Table 11 -10.30 am

I. Procumbent committee will be the right to make final decision in regard the accept

| Reference No | Item | Qty | Non refundable fees | Bid Security |
|---|---|---|---|---|
| NP/RDHS/LM/OE/2020/01 | Office Table | 20 | 1,000.00 | 60,000.00 |
| | Office Table (Large) | 15 | | |
| | Living Room Sofa Set | 01 | | |
| | Plan Drawing Table | 40 | | |
| | Office Revolving Chair | 100 | | |
| | Plastic Chair with Arm | 180 | | |
| | Plastic Chair without Arm | 20 | | |
| | Filling Cabinet | 11 | | |
| | Wooden Cupboard | 13 | | |
| | Almerah Steel | 15 | | |
| NP/RDHS/LM/OE/2020/02 | Patient Bed | 30 | 1,000.00 | 89,000.00 |
| | Bed (Double) | 04 | | |
| | Bedside Locker | 90 | | |
| | Mattress | 30 | | |
| | Cloth Rack | 04 | | |
| | Gumboots | 05 | | |
| | Iron Table | 02 | | |
| | Ladder 7' | 02 | | |

Table -11

| Reference No | Item | Qty | Non refundable fees | Bid Security |
|---|---|---|---|---|
| NP/RDHS/PSDG/LM/EI/2021/01 | Laptop Computer | 24 | 1,000.00 | 82,000.00 |
| | Desktop Computer | 07 | | |
| | Photocopy Machine | 10 | | |
| | Printer | 02 | | |
| | Scanner | 02 | | |
| | Multi Media Projector Screen with Stand | 01 | | |
| | Printer (Colour) | 02 | | |
| | Dot Matrix Printer | 01 | | |
| NP/RDHS/PSSP/LM/EI/2021/02 | Air Conditioner 12000BTU | 01 | 1,000.00 | 35,000.00 |
| | Air Conditioner 24000 BTU | 01 | | |
| | Refrigrator | 08 | | |
| | Washing Machine | 01 | | |
| | Television 32' | 10 | | |
| | Dish Antena with Receiver | 02 | | |
| | Stand Fan | 04 | | |
| | Wall Fan | 10 | | |
| | Gas Cooker | 05 | | |
| | Iron Box | 01 | | |
| | DVD Player | 03 | | |
| | Rechargeble Tourch Light | 01 | | |
| | Electric Kettle | 04 | | |
| | Flask (Large) | 02 | | |
| | Electric Heater | 02 | | |
| | Roll Plug | 15 | | |
| | Polethene Selear | 02 | | |
| | Digital Wall Clock | 03 | | |
| | Mic ,Amplifier, Box | 01 | | |
| | Sink& Tap | 01 | | |
| NP/RDHS/PSSP/LM/EI/2021/03 | Installation Of CCTV | 02 | 1,000.00 | 40,000.00 |
| RDHS/Staff Canteen/PPD/2021-2022/NC 05 | Procurement of Rent for Staff Canteen at BH Point Pedro | | 1,000.00 | 5,000.00 |

**Chairperson,**
**Regional Procurement Committee,**
**RDHS Office,**
**Jaffna**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

TATA பிக்கப் / மகேந்திரா வாகனம் உடன் தேவை.

**077 4458 886, 076 9649 344**

## விற்பனைக்கு

CD125 Benly மோட்டார் சைக்கிள் GV XXXX உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: **077 4497 959**

## பெறுகை மீள் அறிவித்தல்
## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்
## சபைநிதி - 2021

சபைநிதி வேலைத்திட்டங்களுக்கு 15.06.2021 ஆம் திகதி கேள்வி திறக்கப்படும் என 08.06.2021 ஆம் திகதிய பத்திரிகை யில் பிரசுரிக்கப்பட்டிருந்தது. எனினும் நாட்டில் நிலவும் கொவிட் 19 அசாதாரண சூழ்நிலை காரணமாக 15.06.2021 ஆம் திகதி கேள்வி திறக்கப்படவில்லை. எனவே 01.07.2021 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு கேள்வி திறக்கப்படும் என்பதனை அறியத்தருகின்றேன்.

**த.நடனேந்திரன்**
**தலைவர், பெறுகைக் குழு,**
**வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்.** **29.06.2021**

## அறிவித்தல்

யாழ். நல்லூர் கோவில் வீதியில் அமைந்துள்ள 324ம் இலக்க காணி விற்பனைக்கு என்று போலியான தகவல் விளம்பரங்கள் மூலம் அறிவிக்கப்படுகின்றது. அதை நம்பி எவரேனும் பணபரிமாற்றங்கள் செய்தால் அதற்கும் எனக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்பதை இதன்மூலம் அறியத்தருகின்றேன்.

**உரிமையாளர் : சு.சுபேந்திரன்**
**நீர்வேலி வடக்கு, நீர்வேலி.**

## துயர் பகிர்கின்றோம்



எமது பாடசாலையின் முன்னாள் அதிபர்

**அருட் சகோதரி ஜெயநாயகி செபமாலை**

அவரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பாடசாலைச் சமூகம்**
**யா/ இளவாலை கன்னியர் மடம் ம.வி.**
**இளவாலை**

## கண்ணீர் அஞ்சலி



சங்க உறுப்பினர்
**திரு.சு.கஜேந்திரன்** அவர்களின்
பாசமிகு தந்தையார்

**பொன்னையா சுப்பிரமணியம்**

அவர்கள் 25.06.2021 அன்று சிவபத மடைந்தார். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பச்சிலைப்பள்ளி பிரதேச சபை**
**ஊழியர் நலன்புரிச் சங்கம்**

## மரண அறிவித்தல்



**அருட்சகோதரி ஜெயநாயகி செபமாலை தி.கு**

மன்னார் - நானாட்டானைப் பிறப்பிடமாகவும் யாழ். திருக்குடும்ப சபையைச் சேர்ந்தவருமான அருட்சகோதரி ஜெயநாயகி செபமாலை தி.கு (28.06.2021) திங்கட்கிழமை இறைபதம் இணைந்துவிட்டார். அன்னாரின் இறுதிப் பயணத் திருப்பலி (29.06.2021) செவ்வாய்க் கிழமை பி.ப. 3.30 மணிக்கு இறம்பைக்குளம்-வவுனியா புனித அந்தோனியார் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும். பின்னர், அன்னாரின் பூதவுடல் வவுனியா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

**தகவல்:**
**அருட்சகோதரி தியோவ்வின் குருஸ்**
**மாகாணத் தலைவி.**
**121,பிரதான வீதி யாழ்ப்பாணம்.**

## என்னை...

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.
எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் மேலும் கூறியவை வருமாறு:
"பயங்கரவாத நடவடிக்கையில் ஈடுபட்டதால் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட தமிழர்களை விடுவிப்பது தவறான செயல் கிடையாது. இளைஞர் காலத்தில் கைதானபலர் நீண்டகாலம் சிறைச்சாலைகளுக்குள் இருந்துவிட்டனர். இளமைக்காலம் தொலைந்துவிட்டது. வெளியில் இருந்திருந்தால் திருமணமாகி அவர்களுக்கு பிள்ளைகளும் இருந்திருக்கக்கூடும். குறிப்பாக ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டவர்களுக்குகூட 15 வருடங்களில் விடுதலை கிடைக்ககூடும். எனவே, இனியும் வைராக்கியத்துடன் வாழவேண்டியதில்லை. அவர்களை விடுதலைசெய்ய வேண்டும். புனர்வாழ்வு தேவைப்படுவோருக்கு குறுகிய கால புனர்வாழ்வு வழங்கி விடுவிக்கலாம்.
என்னைக் கொலைசெய்வதற்கு தற்கொலைக் குண்டுதாரியை இராணுவத் தலைமையகத்துக்கு அழைத்து வந்த மொரிஷ் என்பவரை விடுவித்து இதற்கான செயலை அரசு ஆரம்பிக்க வேண்டும். மொரிஷ் விடுவிக்கப்பட்டால் வெலிக்கடை சிறைக்கே சென்று அவரை வரவேற்று, ஆனந்தபவனில் தோசையும் வாங்கிக்கொடுத்து வீட்டுக்கு அனுப்பிவைப்பேன்.
விடுவிக்கப்படுபவர்களின் பாதுகாப்பையும் அரசு உறுதிப்படுத்த வேண்டும்." - என்றார்.

### ஹிருணிக்காவுக்கு பாதுகாப்பு

அதேவேளை, துமிந்த சில்வா பொது மன்னிப்பில் விடுதலையாகி வெளியில் வந்துள்ளார்.
எனவே ஹிருணிக்கா மற்றும் அவரின் தாயாரின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கான ஏற்பாடுகளை அவர்களுக்கு வழங்க வேண்டும் எனவும் பொன்சேகா வலியுறுத்தினார்.
அரசியல் கைதிகளாகவுள்ளவர்களை விடுதலைசெய்ய வேண்டும் என்ற கோரிக்கை தமிழ்த் தேசிய அரசியல் தலைமைகளாலும் பொது அமைப்புகளாலும் நீண்டகாலமாகவே விடுக்கப்பட்டு வருகின்றது.
கடந்த வாரம் நாடாளுமன்றில் நாமல் ராஜபக்சவும் இதே கோரிக்கையை முன்வைத்ததைத் தொடர்ந்து, அரசியல் கைதிகளில் 16 பேர் கடந்த வியாழக்கிழமை விடுதலைசெய்யப்பட்டுள்ளனர். அரசியல் கைதிகளாகவுள்ள ஏனையவர்களையும் விடுவிக்க வேண்டும் என்ற கோரிக்கை இன்னும் வலுத்துக்கொண்டிருக்கின்ற நிலையில், சரத் பொன்சேகா மேற்கண்டவாறு அதிரடி அறிவிப்பை - கோரிக்கையை விடுத்துள்ளார். (த-44)

## அஸ்ராஜெனகா...

யாக மொடர்னா மற்றும் பைசர் தடுப்பூசிகளை வழங்கலாம்.
இதற்கான அனுமதியை தேசிய தொற்று நோயியல் பிரிவு வழங்கியுள்ளது என்று இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார். (த-இ)

## சாவு....

களம் அறிவித்துள்ளது. இவர்கள் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
இவ்வாறு உயிரிழந்தவர்களில் 24 ஆண்களும், 17 பெண்களும் உள்ளடங்குகின்றனர்.
இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 ஆயிரத்து 985 ஆக அதிகரித்துள்ளது என்றும் அரச தகவல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (த-22)

## தொற்று...

ரவு அறிவித்துள்ளது.
இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 2 லட்சத்து 55 ஆயிரத்து 468 ஆக அதிகரித்துள்ளது.
கொரோனாவிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 லட்சத்து 21 ஆயிரத்து 249 ஆக உயர்வடைந்துள்ளது.
இதேவேளை, கொரோனாத் தொற்றுக் காரணமாக மருத்துவமனைகள் மற்றும் கொரோனா இடைநிலை சிகிச்சை மையங்கள் என்பனவற்றில் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை 31 ஆயிரத்து 234 ஆக அதிகரித்துள்ளது எனவும் அரச தகவல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (த-22)

## யாழ்.முதல்வருக்கு...

திணைக்களத்தில் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டது. யாழ்ப்பாண மாநகர சபையின் கடந்த 25 ஆம் திகதிய அமர்வில் மாநகர சபை உறுப்பினர் வ.பார்த்தீபனை நோக்கி 'நாய்' என விளித்து பேசினார் என்று தெரிவித்து சபையின் மற்றுமொரு உறுப்பினரான ஜெ.ரஜீவ்காந் ஒரு மாத காலத்துக்கு சபை அமர்வில் கலந்துகொள்வதற்குத் தடை விதிப்பது என்று சபை உறுப்பினர்களின் பெரும்பான்மை சம்மதத்துடன் மாநகர சபை முதல்வர் தீர்மானித்து அதையே செயற்படுத்தியிருந்தார்.
இந்தநிலையில், தனக்கு விதிக்கப்பட்ட தடை, சட்டத்துக்கு முரணானது என்று குறிப்பிட்டு, தடை விதிக்கப்பட்ட உறுப்பினர் ஜெ.ரஜீவ்காந் வடக்கு மாகாண உள்ளூராட்சி திணைக்களத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (த-26)

## ஒரே ஆயுதம்...

பெற்றுக்கொள்வதற்கு மக்கள் தயங்கக்கூடாது. 30 வயதுக்கு மேற்பட்டவார்கள் அனைவரும் தடுப்பூசியின் இரண்டு டோஸ்களையும் தவறாது பெற வேண்டும்."
இவ்வாறு கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
"நாட்டில் கொரோனாத் தடுப்பூசி ஏற்றும் செயற்றிட்டம் விரைவாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அடுத்த மாதத்தில் அதிகளவில் தடுப்பூசிகள் கிடைக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. 30 லட்சம் தடுப்பூசிகளை இதுவரை ஏற்றியுள்ளோம். அடுத்த இரு மாதங்களில் பெரும்பான்மையான மக்களுக்கு முழுமையாகத் தடுப்பூசிகளை ஏற்ற முடியும்.

### தயங்கவேண்டாம்

சில இடங்களில் கொரோனாத் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ள மக்கள் பின்னடிக்கின்றார்கள். மக்கள் இவ்வாறு அச்சமடைவது ஆபத்தையே ஏற்படுத்தும். இந்தத் தடுப்பூசியில் தான் கொரோனாவை எதிர்கொள்ளக் கூடிய நோய் எதிர்ப்பு சக்தி உள்ளது.

### டெல்டா அச்சுறுத்தல் இன்னும் நீடிக்கிறது

இதேவேளை, நாட்டில் சில இடங்களில் மட்டும் 'டெல்டா' உள்ளிட்ட உருமாறிய கொரோனா வைரஸ்களின் அச்சுறுத்தல் நிலை இருக்கின்றது. எனினும், நாட்டை முடக்கவோ அல்லது பயணக் கட்டுப்பாடுகளை பிறப்பிக்கவோ இப்போது எந்தத் தீர்மானமும் எடுக்கவில்லை. ஆனால், நாட்டின் அடுத்த கட்ட நிலைமைகளுக்கு அமைய தீர்மானங்கள் எப்போதும் மாறலாம்.
ஒவ்வொரு மாவட்டத்திலும் நிலைமை எவ்வாறு உள்ளது என்பதை அவதானித்து, சுகாதாரத் தரப்பினர் ஒவ்வொரு நாளும் இது குறித்து தரவுகளைப் பதிவுசெய்கின்றனர். அத்துடன் கொரோனாத் தடுப்புச் செயலணிக் கூட்டத்திலும் ஆராயப்பட்டு தீர்மானம் எடுக்கப்படும்.
தற்போதுள்ள நிலையில் இரண்டாயிரத்துக்கும் குறைவான கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர். இறப்புகளும் நாளாந்தம் ஐம்பதுக்கும் குறைவாகப் பதிவாகின்றன. எனவே, நிலைமைகள் கட்டுப்பாட்டில் உள்ளன என்பதை உறுதியாகத் தெரிவிக்க முடியும்.
ஆனால், வைரஸ் தொற்று பரவவில்லை எனக் கருத்திற்கொள்ளக் கூடாது என சுகாதாரத் தரப்பினர் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றனர். அடுத்த ஒரு மாதகாலம் மிகவும் கவனமாகச் செயற்பட வேண்டும். மக்களின் செயற்பாடுகளில்தான் இது தங்கியுள்ளது" என்றார். (த-22)

## அரசுக்கு...

களை எழுப்பியதுடன் அரசை வீட்டுக்கு அனுப்புவோம் என்றும் குரலெழுப்பினர். அரசி விலை உட்பட அத்தியாவசிய பொருள்களின் விலை உயர்வு மற்றும் எரிபொருள் விலை உயர்வு ஆகியவை தொடர்பிலும் பல்வேறு கோஷங்களை போராட்டகாரார்கள் எழுப்பினர். (த-இ)

## நெல்லியடி

கொள்ளப்பட்ட அன்டிஜென் பரிசோதனையில் நால்வருக்குத் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
நெல்லியடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்குச் சென்று நேற்று முன்தினம் பி.சி.ஆர். மாதிரிகளை வழங்கியிருந்தார். அதன்போதே அவருக்குத் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.
அவற்றில் முன்னெடுக்கப்பட்ட பரிசோதனையில் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது. பெண் பொலிஸ் அலுவலருக்கும் தொற்று உள்ளமை நேற்றுக் கண்டறியப்பட்டது. அதனால் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் 34 அலுவலர்களிடம் நேற்று அன்டிஜென் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அதில் நான்கு பொலிஸ் அலுவலர்களுக்குத் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (த-26)

## 9,988....

கிடைக்கப்பெற்றன. இவை சுகாதார அமைச்சின் தொற்றுநோய்ப் பிரிவின் வழிகாட்டலுக்கமைவாக கொவிட் 19 தொற்று உறுதிப்படுத்தப்பட்ட நோயாளர்களின் எண்ணிக்கையில், முன்னிலை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட கிராம அலுவலர் பிரிவுகளுக்கு வழங்கப்பட்டன.
அவ்வாறு ஒதுக்கீடுசெய்யப்பட்ட கொவிட்19 தடுப்பூசியின் முதல் டோஸை பெற்ற பொதுமக்களுக்கு இரண்டாவது டோஸ் வழங்கும் பணியே நேற்று ஆரம்பிக்கப்பட்டது. எதிர்வரும் ஜூலை 2ஆம் திகதிவரை இரண்டாவது டோஸ் வழங்கும் பணி முன்னெடுக்கப்படவுள்ளது என்று சுகாதாரத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.
இந்தநிலையில், நேற்றைய முதல் நாள் மாலை வரை 9 ஆயிரத்து 988 பேர் கொவிட்-19 தடுப்பூசியின் இரண்டாவது டோஸைப் பெற்றுள்ளனர். (த-26)

# பாதாள கோஷ்டிபோல் பொலிஸார்; ஆட்சி மாறியதும் கடும் நடவடிக்கை

## எச்சரிக்கை விடுக்கின்றார் பொன்சேகா

கொழும்பு, ஜூன் 29
"பாதாள கோஷ்டி உறுப்பினர்கள் செயற்படுவதுபோலவே இரகசிய பொலிஸிலுள்ளவர்கள் செயற்படுகின்றனர். எனவே, தவறான செயலில் ஈடுபடும் இத்தகைய அதிகாரிகளுக்கு எதிராக எமது ஆட்சியில் நிச்சயம் நடவடிக்கை எடுக்கப்படும்."
என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார். எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவிக்கையில்,
இரகசிய பொலிஸில் உள்ள சிலரும் பாதாள கோஷ்டி உறுப்பினர்கள் போலவே செயற்படுகின்றனர். குறிப்பாக பிரபாகரனை கைதுசெய்வதற்கு செல்வது போல, அசேல சம்பத் என்ற சிவில் அமைப்பு செயற்பாட்டாளரை கைதுசெய்வதற்கு பெருமளவானவர்கள் சென்றுள்ளனர். அவரைத் தாக்கியுள்ளனர். நாமும் நிச்சயம் ஆட்சிக்கு வருவோம். எனவே, இவ்வாறு தவறான செயலில் ஈடுபடும் அதிகாரிகளுக்கு எதிராக நிச்சயம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். அதேபோல, நாட்டு வளங்களை கொள்ளையடிக்கும் வெளிநாட்டவர்களுக்கும், உள்நாட்டு வர்த்தகர்களுக்கு எதிராகவும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். விற்கப்படும் சொத்துகள் மீள அரசுடமையாக்கப்படும் என்பதையும் குறிப்பிடுகின்றேன்- என்றார். (த-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடப்புச் சம்பியன் போர்த்துக்கல் யூரோவில் இருந்து வெளியேற்றம்

## பெல்ஜியம் காலிறுதிக்குள்



**மட்ரிட், ஜூன் 29**

**யூரோ கிண்ணத் தொடரின் 16 அணிகள் கொண்ட சுற்றுடன் வெளியேற்றப்பட்டது நடப்புச் சம்பியனான போர்த்துக்கல். பெல்ஜியம் அணி காலிறுதிக் குத் தகுதி பெற்றது.**

ஸ்பெயினில் நேற்று அதிகாலை இடம் பெற்ற இந்த ஆட்டத்தில் போர்த்துக் கலை எதிர்த்து பெல்ஜியம் மோதியது. ஆட்டத்தின் முதல் பாதியில் இரு அணிகளும் கடும் போராட்டத்தை வெளிப்படுத் தின. முதல் 40 நிமிடங்கள் வரையில் கோல்கள் எவையும் பதிவாகவில்லை. 42ஆவது நிமிடத்தில் தோரன் ஹசார்ட் பெல்ஜியத்தின் முதலாவது கோலைப் பதிவுசெய்தார். முதல் பாதியின் முடிவில் 1:0 என்று ஆதிக்கம் செலுத்தியது பெல்ஜியம். இரண்டாவது பாதி யில் 56ஆவது நிமிடத்தில் பெல்ஜியத்தின் நட்சத்திர வீரர் கெவின் டி ப்ரைன் காயம் காரணமாக வெளியேறினார். எனினும் லுகாகு கெவினின் வெளியேற்றத்தால் ஏற்



பட்ட பின்னடைவைச் சரிசெய்தார். நிமிடங்கள் நெருங்க நெருங்க போர்த் துக்கல் வீரர்கள் அவ்வப்போது முறை யற்ற ஆட்டத்தை வெளிப்படுத்தினார் கள். ஆட்டம் நிறைவடைய 8 நிமிடங் கள் இருக்கையில் ஆந்ரே டி சில்வா அடித்த பந்து பெல்ஜியத்தின் கோல் கம்பங்களைத் தொட்டு வந்தது. நூலி ழையில் போர்த்துக்கலின் வாய்ப்புத் தவறியது. இதையடுத்து 1:0 என்ற அடிப்படையில் பெல்ஜியம் வெற்றிபெற போர்த்துக்கல் வெளியேறியது. (ம)




## றொனால்டோவுக்கு இறுதி யூரோ?

**லிஸ்பன், ஜூன் 29**

போர்த்துக்கல் அணியின் தலைவர் கிறிஸ்ரியானோ றொனால்டோவுக்கு இந்த யூரோ கிண்ணமே இறுதித் தொடர் என்பது தொடர் பில் தற்போது பேச்சுக்கள் எழுந்துள்ளன. றொனால்டோவுக்கு தற்போது 36 வயதாகின் றது. யூரோ 4 வருடங்களுக்கு ஒரு தடவை தான் நடைபெறும். எனவே அடுத்த யூரோ நடைபெற றொனால்டோவுக்கு 39 (கடந்த வருடம் நடைபெற வேண்டிய தொடர் கொரோனாவால் இந்த வருடம் நடக்கின்றது) வயதாகிவிடும். இதனால் இந்த யூரோ றொனால் டோவின் இறுதித் தொடர் என்பது தொடர்பில் பேச்சுக்கள் எழுந்துள்ளன. (ம)

## கொரோனா விதிகளை மீறிய குசல் மெண்டிஸ், டிக்வெல்ல!

### நாட்டுக்கு திரும்ப அழைத்துவர கிரிக்கெட் சபை நடவடிக்கை

**லண்டன், ஜூன் 29**

கொரோனா பாதுகாப்பு வளையத்தை மீறி, பொதுவெளியில் நடமாடி புகைப்பிடிக்கத் தயாராகிய குசல் மென்டிஸ், டிக்வெல்ல ஆகிய இருவருக்கும் இலங்கை கிரிக் கெட் ரசிகர்கள் கடும் கண்டனத்தைத் தெரிவித்துள்ளனர். அவர்கள் இருவரையும் உடனடியாக நாட்டுக்கு திருப்பி அழைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கொரோனாப் பெருந்தொற்றுக்கு மத்தியில் சர்வதேச கிரிக்கெட் தொடர்கள் நடத்தப்படுகின்றன.

வீரர்களுக்கு என பாதுகாப்பு வளைய பொறிமுறை உருவாக்கப்பட்டு இந்தத் தொடர்கள் நடத்தப்படும். இந் தப் பாதுகாப்பு வளையத்தை மீறி வீரர்கள் வெளியில் செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது. அது குற்றமாகக் கருதப்படும்.

இந்த நிலையில் இலங்கை அணியின் முக்கிய வீரர்க ளான குசல் மெண்டிஸ், டிக்வெல்ல இருவரும் பொது வெளியில் சிகரெட்டுடன் நடமாடும் காணொலி வெளி யாகி சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. இதையடுத்து வீரர்கள் இருவரையும் உடனடியாக நாட்டுக்கு திருப்பி அழைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

அத்துடன் இலங்கை அணியின் ரசிகர்கள் குறித்த இருவருக்கும் கடும் கண்டனத்தைப் பதிவுசெய்து வருகின்றனர்.

இங்கிலாந்துக்கு எதிராக முன்னதாக நடைபெற்ற ரி20 தொடரில் இலங்கை அணி 0:3 என்று தோல் வியடைந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## யூரோவில் பேரதிர்ச்சி நெதர்லாந்து 'அவுட்'!

**உரோம், ஜூன் 29**

யூரோ கிண்ணத் தொடரில் நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்ற ஆட்டத்தில் நெதர்லாந்துக்கு அதிர்ச்சி கொடுத்து தொடரில் இருந்து வெளியேற்றியது செக்குடியரசு.

இந்த யூரோவைக் கைப்பற்றும் அணிகளில் ஒன்றாக நெதர் லாந்து கணிக்கப்பட்டது. இதனால் அந்த அணியின் மீது பெரும் எதிர்பார்ப்பு இருந்தது. நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் நெதர்லாந்து செக்குடியரசை இலகுவாக தோற் கடிக்கும் என்று கருதிய போதிலும் செக்குடியரசு சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. முதல் பாதியில் கோல்கள் பதிவாகவில்லை. இரண்டாவது பாதியின் 68ஆவது நிமிடத் தில் தோமஸ் கோல்ஸ் செக்குடியரசின் முதலாவது கோலைப் பதிவுசெய்தார். பற்றிக் 80ஆவது நிமிடத்தில் மற்றொரு கோலைப் பதிவுசெய்ய முடிவில் 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது செக்குடியரசு. (ம)

**பணியாட்கள் தேவை**

கிளிநொச்சி கரடிப்போக்கில் அமைந்துள்ள வர்த்தக நிலையத்திற்கு வேலையாட்கள் தேவை. ஆண் பணியாளர்கள் மட்டும்.
வயது எல்லை : 18 - 30 வயது
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 076 825 9927

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் ஆறுகால் மடத்தில் 1ம் ஒழுங்கையில் 10 பரப்புக் காணி விற்பனைக்கு. 2 பரப்பாக பிரித்து கொடுக்கப்படும். 1 பரப்பின் விலை 5 இலட்சம் மட்டும். (யாழ் மானிப்பாய் பிரதான வீதியில் இருந்து 100 m தூரம்)
தொடர்பு:
077 468 3354, 077 2880 152, 076 221 2037

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளம்பரம்: advt@uthayan.com

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 29.06.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.